வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu ஈழநாடு

Email : eelanaduweekly@gmail.com | மலர் : 05 | 22.10.2024 செவ்வாய்க்கிழமை | இதழ் : 295 | பக்கங்கள் : 12



பாராளுமன்றத் தேர்தல் - 2024

தமிழ் தேசியக் கூட்டமைப்பிலிருந்து தமிழ் அரசு கட்சி வெளியேறிய பின்னர்
தமிழ் தேசியக் கூட்டமைப்பு இந்த பாராளுமன்ற தேர்தலில்
ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணியின்
சங்கு சின்னத்தில் போட்டியிடுகின்றது!

தருமலிங்கம் சித்தார்த்தன்
(முன்னாள் பாரளுமன்ற உறுப்பினர்)

X 5

யாழ் - கிளிநொச்சி மாவட்ட முதன்மை வேட்பாளர்

# ஈஸ்டர் குண்டுத் தாக்குதல்களுக்கு

# ரவி செனவிரத்னவே பொறுப்பாளி!

## பரபரப்பு தகவலை வெளியிட்டார் உதய கம்மன்பில
## விசாரணை அறிக்கை ஒன்றையும் வெளிப்படுத்தினார்



கொழும்பு, ஒக்ரோபர் 21

**உயிர்த்த ஞாயிறுதின தற்கொலை குண்டுத் தாக்குதல்களை தடுக்கத் தவறியமை தொடர்பில் அப்போதைய சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபரும் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் தற்போதைய செயலாளருமான ரவி செனவிரத்ன பொறுப்புக் கூறவேண்டும் என பிவித்துரு ஹெல உறுமயவின் தலைவர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.**

உயிர்த்த ஞாயிறுதின தற்கொலை குண்டுத் தாக்குதல்கள் தொடர்பிலான விசாரணை அறிக்கையை வெளிப்படுத்தும் நோக்கில் கொழும்பில் நேற்று நடைபெற்ற விசேட ஊடகவியலாளர் சந்திப்பின்போது அவர் இதனைக் குறிப்பிட்டார்.

இது தொடர்பிலான விசாரணை அறிக்கைகளை ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க வெளியிடவேண்டும் என உதய கம்மன்பில கடந்த திங்கட்கிழமை

11

## 'டானா' புயலால் பாதிப்பு இல்லை

யாழ்ப்பாணம், ஒக். 22

"டானா" புயலால் வடக்கு மாகாணத்துக்கு எந்தவொரு பாதிப்பும் இல்லை என்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் புவியியல்துறையின் தலைவரும் வானிலையாளருமான நாகமுத்து பிரதீபராஜா தெரிவித்தார்.

இதேவேளை, இன்று செவ்வாய்க் கிழமை முதல் பரவலாக எல்லா இடங்களுக்கும் மழை கிடைக்கும் என்றும் அவர் கூறினார்.

11

## பொது தேர்தலுக்கு எதிராக உயர்நீதிமன்றத்தில் மனு!

கொழும்பு, ஒக். 22

நவம்பர் 14ஆம் திகதி பாராளுமன்றத் தேர்தலை நடத்துவது அரசியல் சாசனத்துக்கு எதிரானது என்று தீர்ப்பளிக்கக் கோரி உயர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

சிவில் அமைப்பு செயல்பாட்டாளரும் "நாம் இலங்கை தேசிய அமைப்பின்" அழைப்பாளருமான எச். எம். பிரியந்த ஹேரத்

11

## உயிர்த்த ஞாயிறு தாக்குதல் குறித்து மக்களை தவறாக வழிநடத்த முயற்சி

### கர்தினால் மல்கம் ரஞ்சித் குற்றச்சாட்டு

கொழும்பு, ஒக். 22

2019 உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் பொது மக்களை தவறாக வழிநடத்துவதற்கான முயற்சிகள் இடம்பெறுகின்றன என பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் தெரிவித்தார்.

முன்னாள் அரசாங்கத்தைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர்கள், அதிகாரிகள் குழு ஒன்று



விசாரணைகள் தொடர்பில்

11

## பாராளுமன்ற தேர்தலை அவதானிக்க 8,000 கண்காணிப்பாளர்கள் களத்தில்

கொழும்பு, ஒக். 22

பாராளுமன்றத் தேர்தலுக்கான பிரசாரங்கள் நாடு முழுவதும் சூடு பிடித்துள்ள நிலையில், தேர்தல் கண்காணிப்பு நடவடிக்கைகளில் உள்நாட்டு, வெளிநாட்டவர்கள் அடங்கலாக 8 ஆயிரம் கண்காணிப்பாளர்கள் கண்காணிப்பில் ஈடுபட உள்ளனர்.

பாராளுமன்றத் தேர்தல் எதிர்வரும் 14ஆம் திகதி நடைபெற உள்ளதுடன், தபால்மூல வாக்களிப்பு ஒக்டோபர் 31, நவம்பர் முதலாம் மற்றும் 4ஆம் திகதிகளில் நடைபெற உள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

குறித்த தினங்களில் வாக்களிக்க முடியாத அனைத்து அரச ஊழியர்களுக்கு நவம்பர் 7ஆம், 8ஆம் திகதிகளில் வாக்களிக்க சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது.

11

## புதிய திட்டங்களை ஆரம்பிக்கும் ஆசிய அபிவிருத்தி வங்கி

கொழும்பு, ஒக்.22

அடுத்த வருடத்தின் ஆரம்பத்தில் இலங்கையில் பல புதிய அபிவிருத்தித் திட்டங்களை ஆரம்பிக்கவுள்ளதாக ஆசிய அபிவிருத்தி வங்கி தெரிவித்துள்ளது.

இந்த அபிவிருத்தி திட்டங்களில் கிராமிய உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவது முதன்மையாகும். அத்துடன் தற்போது முன்னெடுக்கப்பட்டு வரும் அபிவிருத்தித் திட்டங்களுக்கும் தொடர்ந்தும் நிதியுதவி வழங்கப்படும் என்றும் அந்த வங்கி தெரிவித்தது. (அ)

## யாழ். இ.போ.சவினர் போராட்டம்

யாழ்ப்பாணம், ஒக். 22

யாழ்ப்பாணம் மத்திய பேருந்து நிலையத்தில் இலங்கை போக்குவரத்து சபையின் சாரதிகள், நடத்துநர்கள் நேற்று கவனவீர்ப்பில் ஈடுபட்டனர்.

இலங்கை போக்குவரத்து சபையின் சாரதி ஒருவர் வவுனியாவில் கடந்த 18 ஆம் திகதி தாக்கப்பட்டமைக்கு எதிர்ப்பு தெரிவித்து இந்தக் கவனவீர்ப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

கடந்த காலங்களில் தனியார் பேருந்து சாரதிகளால் இலங்கை போக்குவரத்து சபையின்

11

## மஹிந்தவின் பாதுகாப்பில் அதிக கவனம் வேண்டும்!

### சாகர காரியவசம் கோரிக்கை

கொழும்பு, ஒக். 22

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு உயிர் அச்சுறுத்தல் இருப்பதன் காரணமாக பாதுகாப்பு குறித்து அரசாங்கம் அவதானம் செலுத்த வேண்டும் என பொதுஜன பெரமுனவின் பொதுச் செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்துள்ளார்.

11

## பாதாள குழுக்களை ஒடுக்க ஜனாதிபதி விசேட பணிப்பு

கொழும்பு, ஒக். 22

பாதாள உலக குழுக்களை கட்டுப்படுத்தும் அதிகாரிகளுக்கு எதிராக குற்றவாளிகளால் தாக்கல் செய்யப்பட்டுள்ள அடிப்படை உரிமை மீறல் வழக்குகளை நீக்குவதற்கான தலையீடுகளை சட்டமா அதிபரை மேற்கொள்ளுமாறு ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க பணிப்புரை விடுத்துள்ளார்.

11

## 50 ஆயிரம் கோடி ரூபாய் கடனை செலுத்த இலங்கைக்கு சலுகை வழங்கும் இந்தியா

கொழும்பு, ஒக். 22

இலங்கை அரசு இந்தியாவுக்கு வரும் வாரத்தில் திருப்பிச் செலுத்தவேண்டிய சுமார் 50 ஆயிரம் கோடி ரூபாய் கடனைச் செலுத்த முடியாமல் போய், இலங்கைக்கு மீண்டும் கெட்ட பெயர் வந்துவிடாமல் இருப்பதற்காக அந்தக் கடனுக்கு முற்கூட்டியே சலுகைக் காலத்தை மேலதிகமாக அறிவித்து இலங்கையை மீண்டும் ஒரு தடவை அகௌரவப்படாமல் காப்பாற்ற புதுடில்லி முன்வந்திருக்கின்றது எனத் தெரிகின்றது.

11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இப்படியும் நடக்கிறது

இந்தப் பத்தியில் நேற்று தேர்தலில் போட்டியிடுகின்ற அனைவருமே தாங்கள் வெற்றி பெறப்போவதாக நம்பிக்கொண்டிருப்பது பற்றி எழுதியிருந்தேன். அதனைப் படித்துவிட்டு நண்பர் ஒருவர் கேட்டார், "விளையாட்டுப் போட்டியில் கலந்துகொள்கின்ற ஒருவர், வெற்றிபெறுவேன் என்று நம்பிக்கொண்டுதான் போட்டியில் கலந்துகொள்வார், அப்படி கலந்துகொள்கின்ற ஒருவர் கடைசிவரை ஓடி முடித்தாலே அதுவும் ஒரு சாதனைதானே", என்று.

உண்மைதான் பத்து கிலோ மீற்றர் தூரம் மரதன் ஓட்டப் போட்டியில் வெற்றிபெறுவது மாத்திரமல்ல, ஓடி முடிப்பதும் சாதனைதான். அதற்காக பாராளுமன்ற தேர்தலில் போட்டியிட்டு வெற்றிபெறுவேன் என்று நினைத்துக்கொண்டு போட்டியிடுவதும், போட்டி முடியும் வரை நின்று பிடிப்பதும் சாதனை அல்ல. சில ஆயிரம் ரூபாய்களை கட்டுப்பணமாக செலுத்திவிட்டு, தேர்தலில் போட்டியிடுவது ஒன்றும் சாதனைக்குரியதல்ல. ஆகக்குறைந்தது தனக்கு வேண்டியவர்களாவது தனக்கு வாக்களிப்பார்களா என்பதையாவது தெரிந்து வைத்திருக்கவேண்டாமா? என்று நண்பரிடம் கேட்கவேண்டியதாயிற்று.

அதுமட்டுமல்ல, யாழ்ப்பாண மாநகரசபை தேர்தலில் ஒரு வட்டாரத்தில் போட்டியிட்டு வெற்றிபெறமுயாத சிலர், பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிட்டு வெற்றிபெறுவோம் என்று நம்பிக்கொண்டிருப்பதும், சுயேச்சைக் குழுவில் தனக்கு இடம் தரவில்லை என்பதற்காக, தானே ஒரு சுயேச்சைக்குழுவை களம் இறக்குவதும் புரிந்துகொள்ள முடியாதது.

அதுவல்ல இன்று நாம் சொல்ல வருவது,

நடக்கவிருக்கும் தேர்தலில் தமிழ் மக்கள் எப்படி நடந்துகொள்ளவேண்டும் என்று மன்னார் ஆயர் அறிக்கை ஒன்றின் மூலம் தெரிவித்திருக்கிறார்.

"நமது நாளாந்த பொருளாதார மற்றும் வாழ்வியல் தேவைகள் என்றுமில்லாதவாறு மேலோங்கி நிற்கும் இவ்வேளையில் அவற்றை மட்டும் கருத்தில் கொள்ளாமல் நாம் இதுவரை காலமும் போராடி வந்த அரசியல் உரிமைகளை பாராளுமன்றம் ஊடாக வென்றெடுக்கக் கூடிய நபர்களுக்கே நாம் வாக்களிக்க வேண்டும்", என்று மன்னார் ஆயர் வேண்டுகோள் விடுத்திருப்பதை படித்தபோது, அவர் எதனைச் சொல்ல வருகிறார் என்பதைப் புரிந்துகொள்ள முடிந்தது.

பாராளுமன்றம் ஊடாக எமது அரசியல் உரிமைகளை வென்றெடுக்கக் கூடியவர்களையே தெரிவுசெய்யவேண்டும் என்று அவர் கேட்டிருப்பது ஒன்றை புரியவைத்திருக்கின்றது. அதாவது இதுகாலவரை பதினைந்து ஆண்டுகளாக அல்ல அதற்கும் மேலான ஆண்டுகளாக பாராளுமன்றத்தில் நமது பிரதிநிதிகள் பலர் இருந்துகொண்டிருக்கின்றனர். அவர்களால் இதுவரை அந்தப் பிரதிநிதித்துவத்தின் ஊடாக எந்த உரிமையையும் பெற்றுத் தரமுடியவில்லை. அதிகம் ஏன், பல தசாப்தமாக பாராளுமன்றில் இருந்த மறைந்த சம்பந்தன் கூட அடுத்த தீபாவளிக்கு தீர்வு வருகின்றது. அடுத்த புத்தாண்டுக்குள் வந்துவிடும் என்று கூறிக்கொண்டிருந்தாரே தவிர, அவரால் கூட தீர்வைத் தரமுடியவில்லை.

அப்படியெனில், பாராளுமன்றம் ஊடாக நமது அரசியல் உரிமைகளை வென்றெடுக்கக் கூடிய நபர்களுக்கே வாக்களிக்க வேண்டும் என்று ஆயர் கோரிக்கை விடுத்திருப்பது எதனை உணர்த்துகின்றது. ஏற்கனவே, பாராளுமன்றத்தில் இருந்தும் எமது உரிமைகளை பெற்றுக்கொடுக்கவில்லை. இனி மேலும் அவர்களால் பெற்றுக்கொடுக்கமுடியாது என்பதால், அவ்வாறு பெற்றுக் கொடுக்கக்கூடியவர்களை இனம் கண்டு வாக்களியுங்கள் என்று ஆயர் ஆலோசனை சொல்கிறார் என்றே கொள்ளலாம்.

"உரிமை மறுப்புக்கு இலக்கான சிறுபான்மை மக்களாகிய நாம் நமது அனைத்து வகையான உரிமைகளையும் பெறுவதற்குரிய ஆகக்கூடிய வழிமுறை அரசியல் தான். இந்த அரசியல் பிரதிநிதிகளாக போட்டியிடுகின்ற அனைவரும் அதன் கனதியைஉணர்ந்தவர்களா? என்பது கேள்விக்குறியே.", என்றும் கேள்வி எழுப்பியுள்ள ஆயர், "இந்த நிலையில் யாருக்கு வாக்களிக்கக்கூடாது, என்பதையும் யாருக்கு வாக்களிக்க வேண்டும் என்பதையும் வாக்காளர்கள் தமது கவனத்தில் கொண்டு செயற்பட வேண்டும்", என்றும் கோரிக்கை விடுத்திருக்கிறார்.


இந்தப் பத்தியை எழுதிக்கொண்டிருந்தபோது, கொழும்பிலிருந்து நண்பர் ஒருவர் தொலைபேசியில் பேசினார். வடக்கு அரசியல் நிலைமைகளை விலாவாரியாக கேட்டுவிட்டுச் சொன்னார்:

"என்னதான் இருந்தாலும், அடுத்த அமைச்சரவையில் உங்கள் தரப்பிலிருந்தும் ஒருவர் நிச்சயம் இடம்பெறுவார். அதற்கான பேச்சுகள் முடிந்துவிட்டன. ஆனால், அவர் அங்கு வெற்றிபெறவேண்டுமே", என்று.

இந்தத் தடவை ஆயரின் ஆலோசனையை கேட்காமல் தமிழ் மக்கள் வாக்களித்தால், தமிழ்த் தேசியம் ஓர் அமைச்சரையும் பிரசவிக்கும்.!

- ஊர்க்குருவி

## யாழ். போதனா மருத்துவமனை படுகொலை த. தே. ம. முன்னணி நேற்று நினைவேந்தியது



யாழ்ப்பாணம், ஒக். 22

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் இந்திய இராணுவத்தினரால் படுகொலை செய்யப்பட்டவர்களின் 37ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு நேற்றையதினம், மருத்துவமனைக்கு முன்பாக நடைபெற்றது.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்த நினைவேந்தல் நிகழ்வில் சுடரேற்றி, மலர்தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது.

இதில் படுகொலை செய்யப்பட்ட மருத்துவர்கள், தாதியர்கள், ஊழியர்கள், பொதுமக்களின் உறவினர்கள், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளர் செ. கஜேந்திரன் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

## தெல்லிப்பழையில் பற்றைக்குள் சொகுசு கார் பொலிஸாரால் மீட்பு

யாழ்ப்பாணம், ஒக். 22

தெல்லிப்பழை பகுதியில் பற்றைக்காடொன்றில் இருந்து சொகுசு கார் ஒன்று பொலிஸாரினால் மீட்கப்பட்டுள்ளது.

பற்றைக்காடு ஒன்றினுள் சொகுசு கார் ஒன்று மறைத்து வைக்கப்பட்டுள்ளதாக பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் சம்பவ இடத்துக்கு சென்ற பொலிஸார் காரை மீட்டு பொலிஸ் நிலையம் கொண்டு சென்றனர்.

பொலிஸ் நிலையத்தில் காரின் இலக்கத் தகட்டின் பிரகாரம் விசாரணைகளை முன்னெடுத்தவேளை, அது போலியானது என தெரிய வந்துள்ளது. அத்துடன் காரில் இருந்த ஆவணங்களும் போலியானவை என்பது தெரிய வந்துள்ளது.

இது குற்றச்செயல்களுடன் தொடர்புடைய காராக இருக்கலாம் என பொலிஸார் சந்தேகிக்கின்றனர். கார் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.

## வேட்பாளரின் மோ.சைக்கிள் பறிமுதல்!

வவுனியா, ஒக். 22

வவுனியா வீரபுரம் பகுதியில் வீதியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த இலங்கை தமிழ் அரசு கட்சியின் வன்னி மாவட்ட வேட்பாளரின் மோட்டார் சைக்கிளை நேற்று முன்தினம் இரவு பொலிஸார் எடுத்துச் சென்றனர்.

செட்டிக்குளத்தை சேர்ந்த வேட்பாளரான ஜெகன் சிவானந்தராசாவின் மோட்டார் சைக்கிளே இவ்வாறு எடுத்துச் செல்லப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. இது தொடர்பில் அவர் கூறுகையில்,

நேற்று முன்தினம் இரவு 8 மணியளவில் மின்குமிழ் ஒளிராததால் வீரபுரம் கிராமத்தின் உப தபால் கந்தோருக்கு அருகாமையில் வீதியோரமாக எனது மோட்டார் சைக்கிளை நிறுத்தி விட்டு வவுனியா சென்றிருந்தேன்.

மீண்டும் அதனை எடுக்கச்சென்றபோது அங்கு வந்த செட்டிக்குளம் பொலிஸார் மோட்டார் சைக்கிளை எடுக்க விடாது தடுத்ததுடன், எனது சாரதி அனுமதி பத்திரத்தையும் பெற்று மோட்டார் சைக்கிளை பொலிஸ் நிலையத்துக்கு எடுத்துச் சென்றனர்.

இது தொடர்பில் தேர்தல்கள் அலுவலகத்தில் முறைப்பாட்டு பதிவு செய்துள்ளேன் - என்றார். (எ)

## ஆசிரியர் தாக்கியதில் மாணவனுக்கு காயம்!

### வவுனியா பொலிஸில் முறைப்பாடு

வவுனியா, ஒக். 22

வவுனியா நகரப் பகுதியில் அமைந்துள்ள முன்னணி பாடசாலை ஒன்றில் கல்வி கற்கும் மாணவனை ஆசிரியர் தாக்கியதில் காயமடைந்த மாணவன் வவுனியா மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுள்ளார்.

தரம் 11 இல் கல்வி கற்கும் மாணவன் மீது ஆசிரியர் ஒருவர் கடந்த வெள்ளிக்கிழமை தாக்கினார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இதனால் காயமடைந்த மாணவன் வவுனியா பொது மருத்துவமனையில் கடந்த இரு தினங்களாக சிகிச்சைக்காக சேர்க் கப்பட்ட நிலையில் நேற்றைய தினம் வீடு திரும்பினார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் வவுனியா பொலிஸ் நிலையத் தில் முறைப்பாடு செய்யப்பட் டுள்ளது.

இதேவேளை, மாணவனை தாக்கியதாக குற்றஞ் சாட்டப்பட்ட ஆசிரியர் இதுவரை கைது செய்யப்படவில்லை என மாணவனின் உறவினர்கள் தெரிவித்தனர். (எ)

## பனை அபிவிருத்தி சபைத் தலைவராக இரேனியஸ் செல்வின் பொறுப்பேற்றார்

யாழ்ப்பாணம், ஒக். 22

பனை அபிவிருத்தி சபை தலைவராக நியமிக்கப்பட்ட இரேனியஸ் செல்வின் கைதடியில் உள்ள பனை அபிவிருத்தி அதிகார சபை அலுவலகத்தில் தனது கடமைகளைப் பொறுப்பேற்றார்.

அமைச்சர் விஜித ஹேரத் தால் குறித்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

இரேனியஸ் செல்வின் இலங்கை நிர்வாக சேவையில் பல்வேறு பதவிகளை வகித்த நிலையில் புதிய அரசாங்கத்தால் பனை அபி



விருத்தி அதிகார சபை தலைவர் பதவிக்கு நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்த நிலையில் நேற்றுக் காலை 10: 15 மணியளவில் சுபவேளையில் தனது கடமைகளை பொறுப்பேற்றார். (எ-05)

## மரக்கறிகளின் விலைகள் உயர்வு

யாழ்ப்பாணம், ஒக். 22

யாழ்ப்பாணத்தில் மரக்கறிகளின் விலைகள் திடீர் உயர்வை சந்தித்துள்ளன.

திருநெல்வேலி சந்தையில், பாவற்காய், பயிற்றங்காய் போன்றவை கிலோ 350 ரூபாயாகவும் கத்தரிக்காயின் விலை கிலோ 200 ரூபாயாகவும், மரவள்ளிக் கிழங்கு கிலோ 300 ரூபாயாகவும், பச்சைமிளகாய் கிலோ 350 ரூபாயாகவும் விற்பனையாகின்றன.

வரும் நாட்களில் மரக்கறிகளின் விலைகள் மேலும் அதிகரிக்கலாம் என்றும் கூறப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu ඊළනාඩු
22.10.2024 செவ்வாய்க்கிழமை
பிலவ வருடம், ஐப்பசி 05

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# ஜெய்சங்கர் கூறியது என்ன?

இலங்கைக்கு இந்தியப் படைகளை அனுப்பியது மாபெரும் தவறு என்று இந்திய வெளியுறவு அமைச்சர் சுப்பிரமணியம் ஜெய்சங்கர் கூறனாரென நேற்றையதினம் தமிழ்ப் பத்திரிகைகளில் செய்தியொன்று வெளியாகியிருந்தது.

ஜெய்சங்கர் எழுதிய 'The Indian Way' (இந்திய வழி) என்ற ஆங்கில நூலை சிங்களத்தில் மொழி பெயர்த்து 'இந்திய மாவத்தை' என்ற நூலை இந்தியாவுக்கான முன்னாள் இலங்கை உயர்ஸ்தானிகர் மிலிந்த மொறகொடவின் 'பாத்ஃபைண்டர்' அறக்கட்டளை வெளியிட்டது. புதிய ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க பதவியேற்ற பிறகு முதற்தடவையாக கொழும்புக்கு வருகை தந்த ஜெய்சங்கரிடம் அந்த சிங்கள நூலை மொறகொட கையளித்தார்.

அந்த நூலில் 'டில்லியின் பிடிவாதக் கொள்கை' என்ற அத்தியாயத்தில் ஒரு பந்தியில் இலங்கை இனப்பிரச்னையில் இந்தியாவின் நேரடி தலையீடு குறித்து ஜெய்சங்கர் கருத்துத் தெரிவித்திருக்கிறார். அந்தக் கருத்தை அடிப்படையாகக் கொண்டு கொழும்பு சிங்கள வாரப் பத்திரிகை ஒன்று "37 வருடங்களுக்கு முன்னர் இலங்கைக்கு இந்தியப் படைகளை அன்றைய பிரதமர் ராஜீவ் காந்தியின் காங்கிரஸ் அரசாங்கம் அனுப்பியது 'மாபெரும் தவறு' என்று ஜெய்சங்கர் கூறினார் என்று முன்பக்கச் செய்தியொன்றை வெளியிட்டது.

அந்த செய்தியை மேற்கோள் காட்டி தமிழ்ப் பத்திரிகைகளும் செய்திகளை வெளியிட்டன. அந்த செய்திகளைப் பார்த்ததும் படைகளை அனுப்பியது இந்தியா செய்த தவறு என்று ஏதோ ஒருசில தினங்களுக்கு முன்னர் ஜெய்சங்கர கூறியிருக்கிறாரென ஓர் எண்ணம் வாசகர்களுக்கு ஏற்பட்டிருக்கக்கூடும். இந்தியாவின் வெளியுறவு அமைச்சராக பதவி வகிக்கும் முதல் தமிழரான ஜெய்சங்கர் ஆங்கில நூலை சில வருடங்களுக்கு முன்னர் எழுதியிருந்தார். அதை தமிழில் மொழிபெயர்த்து சென்னை 'இந்து' பத்திரிகை குழுமம் நூலாக வெளியிட்டு நான்கு வருடங்கள் (2020) கடந்துவிட்டன.

ஜெய்சங்கர் இந்திய படைகளின் இலங்கை வருகை குறித்து புதிதாக எந்தக் கருத்தையும் கூறவில்லை என்பதை இதன் மூலம் புரிந்து கொள்ள முடியும். 1987 ஜுலை இந்திய - இலங்கை சமாதான உடன்படிக்கையை அடுத்து இந்திய அமைதி காக்கும் படை என்ற பெயரில் வந்த இந்திய படைகளின் நடவடிக்கைகள் குறித்து பல்வேறு விமர்சனங்கள் இருக்கின்றன. அது வேறு விடயம்.

தமிழ் மொழி பெயர்ப்பு நூலில் நான்காவது அத்தியாயத்தில் ஒரு பந்தியில் "இந்தியப் படைகள் சரியான முன்தயாரிப்புகளுடன் இலங்கைக்கு செல்லவில்லை. உள்ளூர் மக்களின் சுபாவம் என்ன, அவர்களுடைய ஆர்வம் எதில் உள்ளது என்பது குறித்த புரிதல் எதுவும் இந்திய அரசுக்கு இருக்கவில்லை. எதிராளிகளின் உளவு வேலைக்கு ஈடான எதிர் உத்திகள் கையாளப்படவில்லை. விவகாரத்தைக் கையாளுவதற்கு போதிய கவனம் செலுத்தப்படவில்லை", என்று கூறியிருக்கிறார். 'மாபெரும் தவறு' என்று அவர் கூறினாரென இதை வியாக்கியானம் செய்யலாமா என்பது ஒரு கேள்வி.

"அவலங்கள் நடந்து முடிந்த பிறகு எவரும் அபிப்பிராயங்களைக் கூறலாம். சம்பவங்களுக்கு பிறகு எவரும் புத்திசாலிகளாக மாறுவது சுலபம்", என்று ஒரு கூற்று இருக்கிறது.

இந்தியப் படைகளை இலங்கைக்கு அனுப்புவதற்கு தீர்மானிக்கப்பட்ட வேளையில் வெளியுறவு செயலாளராக இருந்த தமிழரான ஏ.பி. வெங்கடேஸ்வரன் "இலங்கைக்கு செல்கின்ற படைகள் அங்கிருந்து திரும்பும்போது முன்னர் நிலவியதை விடவும் மிகவும் மோசமான நிலையிலேயே அந்த நாட்டை விட்டுவிட்டு வரும்", என்று எச்சரிக்கை செய்தார் என்பதை இந்த சந்தர்ப்பத்தில் நினைவுபடுத்துவது பொருத்தமானதாக இருக்கும். அவ்வாறு கூறிய பிறகு வெங்கடேஸ்வரனை ராஜீவ் காந்தி வெளியுறவு செயலாளர் பதவியில் வைத்திருக்கவில்லை.

அவரின் எச்சரிக்கை எந்தளவு கச்சிதமானது என்பதை இலங்கை தமிழர்களைவிட வேறு எவரால் சிறப்பாக புரிந்து கொள்ளமுடியும்?

# வாக்குச்சீட்டு விநியோகிக்கும் அலுவலர்களுக்கு செயலமர்வு




யாழ்ப்பாணம், ஒக். 22

பாராளுமன்றத் தேர்தலில் தபால் மூல வாக்களிப்புக்கான வாக்குச்சீட்டு விநியோகிக்கும் அலுவலர்களுக்கான விசேட செயலமர்வு யாழ். மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலர் மருதலிங்கம் பிரதீபன் தலைமையில் யாழ். மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நேற்றையதினம் நடைபெற்றது.

இதன்போது, கருத்து வெளியிட்ட பதில் அரசாங்க அதிபர், கடந்த ஜனாதிபதித் தேர்தல் நீதியாகவும் சுமுகமாகவும் நடைபெற்றதற்கு ஒத்துழைப்பு வழங்கிய அனைவருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்து கொள்கின்றோம்.


இதேவேளை, தபால் மூல வாக்களிப்பிற்கான வாக்குச் சீட்டுக்கள் மற்றும் உரிய ஆவணங்களை பொதியிட்டு விநியோகிக்கும் கடமையானது ஒரு குழுக்கடமையாகும் என்பதால் கடமைகளில் ஈடுபடும் அலுவலர்கள் வினைத்திறனாக செயல்பட்டு ஒத்துழைப்பு நல்குமாறு கேட்டுக் கொண்டார்.

இதேவேளை, பாராளுமன்றத் தேர்தலில் தபால் மூல வாக்களிப்பு கடமைகளில் ஈடுபடவுள்ள அலுவலர்களுக்கான கடமைகள் மற்றும் பொறுப்புகள் தொடர்பில் உதவித் தேர்தல்கள் ஆணையாளர் இ. கி. அமல்ராஜ் விளக்கமளித்தார்.

இந்தக் கலந்துரையாடலில் தபால் மூல வாக்களிப்புக்கான வாக்குச்சீட்டு விநியோகிக்கும் கடமையில் ஈடுபடவுள்ள பதவிநிலை உத்தியோகத்தர்கள் மற்றும் உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர்.

(எ-05)

# தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனத்தின் உளவளத்துணை பயிற்சிநெறி ஆரம்பம்!



யாழ்ப்பாணம், ஒக். 22


தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனத்தின் உளவளத்துணை பயிற்சி நெறி அறிமுக நிகழ்வு நேற்று முன்தினம் ஞாயிற்றுக் கிழமை யாழ். மாவட்ட முகாமைத்துவ பயிற்சி நிலையத்தில் நடைபெற்றது.

ஆரம்ப நிகழ்வில் உளவளத்துணை பயிற்சி நெறி தொடர்பில் மாணவர்களுக்கு தெளிவுபடுத்தும் கருத்துகளை விருந்தினர்கள் தெரிவித்தனர்.

இந்த நிகழ்வில், தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனத்தின் பிரதிப் பணிப்பாளர் நாயகம் மற்றும் கற்கைநெறி பணிப்பாளர் திருமதி வரதகௌரி வாசுதேவன், மாவட்ட உளவளத்துணை இணைப்பாளர் என்.உதயகுமார், முகாமைத்துவ கற்கை நெறி பயிற்சி நிலையத்தின் அபிவிருத்தி உத்தியோகத்தர் எஸ்.சபேசன், தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனத்தின் கிளிநொச்சி பிராந்திய அலுவலகத்தின் நிலைய பொறுப்பதிகாரி ஜி. கருணாகரன், தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனத்தின் பணியாளர்கள் மற்றும் உளவளத்துணை மாணவர்கள் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர்.

இந்தக் கற்கைநெறியில் புதிதாக இணைய விரும்புகிறவர்கள் 076 192 4338 என்ற தொலைபேசி இலக்கத்தை தொடர்பு கொண்டு அறிவுறுத்தல்களை பெற்று இணைந்து கொள்ள முடியும் என்று கிளிநொச்சி பிராந்திய அலுவலகத்தின் நிலைய பொறுப்பதிகாரி ஜி. கருணாகரன் தெரிவித்துள்ளார்.

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**மேடம்**
கணவன் - மனைவிக்குள் இருந்த மனகசப்புகள் நீங்கி மகிழ்ச்சி அதிகரிக்கும். வெளிவட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள். பணிகளை விரைந்து முடிப்பீர்கள். மனசாட்சி படி செயல்படும் நாள்.

**இடபம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் செலவுகளை குறைக்க முடியாமல் திணறுவீர்கள். கணவன் - மனைவிக்குள் கருத்து வேறுபாடுகள் வந்து நீங்கும். முன்கோபத்தை தவிர்க்க வேண்டிய நாள்.

**மிதுனம்**
திட்டமிட்ட காரியங்களை அலைந்து திரிந்து முடிக்க வேண்டி வரும். வியாபாரத்தில் வேலையாட்களால் பிரச்னைகள் வந்து நீங்கும். உத்தியோகத்தில் மேலதிகாரி உடன் மோதல்கள் வேண்டாம்.

**கடகம்**
எதிர்ப்புகள் நிறைவேறும். நெடுநாட்களாக பார்க்க நினைத்த ஒருவர் உங்களை தேடி வருவார். வியாபாரத்தை பெருக்குவீர்கள். புது பொறுப்புகளை ஏற்பீர்கள். புகழ் கௌரவம் உயரும் நாள்.

**சிம்மம்**
மற்றவர்களுக்காக சில பொறுப்புகளை ஏற்பீர்கள். வீடு வாகனத்தை சீர் செய்வீர்கள். வியாபாரத்தில் புது இடத்திற்கு கடையை மாற்றுவீர்கள். உத்தியோகத்தில் தலைமையின் ஆதரவு பெருகும்.

**கன்னி**
கடந்த இரண்டு நாட்களாக இருந்த அலைச்சல் டென்ஷன் கோபம் யாவும் குறையும். குடும்பத்தில் நிம்மதி உண்டாகும். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் ஒத்துழைப்பார்கள். புதிய பாதை தெரியும்.

**துலாம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் சந்தேகப்படுவதை முதலில் நிறுத்துங்கள் குடும்பத்தில் உள்ளவர்கள் யாரும் தன்னைப் புரிந்துக்கொள்ளவில்லை என ஆதங்கப்படுவீர்கள். நாவடக்கம் தேவைப்படும்.

**விருட்சிகம்**
சவாலான வேலைகளையும் சாதாரணமாக முடிப்பீர்கள். வியாபாரத்தில் புது வாடிக்கையாளர்கள் அறிமுகமாவார்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களுக்கு உதவுவீர்கள். திறமைகள் வெளிப்படும்.

**தனுசு**
குடும்பத்தில் உள்ளவர்களின் உணர்வுகளை புரிந்துக் கொண்டு அதற்கேற்ப உங்களை மாற்றிக் கொள்வீர்கள். அதிகாரப் பதவியில் இருப்பவர்கள் அறிமுகமாவார்கள். அமோகமான நாள்.

**மகரம்**
புதிய திட்டங்கள் நிறைவேறும். ஆடம்பர செலவுகளை குறைத்து சேமிக்கத் தொடங்குவீர்கள். வியாபாரத்தில் பழைய வேலையாட்களை மாற்றுவீர்கள். எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும்.

**கும்பம்**
அரசு காரியங்கள் சாதகமாக முடியும். பழைய கடனைத் தீர்க்க புது வழியை யோசிப்பீர்கள். பிரியமானவர்களின் சந்திப்பு நிகழும். உத்தியோகத்தில் சூட்சுமங்களை கற்றுக் கொள்வீர்கள்.

**மீனம்**
சொத்து பிரச்னைக்கு நல்ல தீர்வு கிடைக்கும். பிரபலங்களின் நட்பு கிடைக்கும். வியாபாரத்தில் பழைய சரக்குகள் விற்கும். உத்தியோகத்தில் அதிகாரிகளுக்கு சில ஆலோசனைகள் தருவீர்கள்.

# மன்னார் பாலத்துக்கு அருகில் கடற்கரை பூங்காவுக்கு அடிக்கல்

மன்னார், ஒக். 22

மன்னார் பிரதான பாலத்துக்கு அருகில் கடற்கரை பூங்காவுக்கான அங்குரார்ப்பண நிகழ்வு நேற்று நடைபெற்றது.

மன்னார் நகர சபை செயலாளர் தலைமையில் இந்த நிகழ்வு நடைபெற்றது.

முதலில் கடற்கரை பூங்காவுக்கான பெயர்ப்பலகை திரை நீக்கப்பட்டதுடன் நிர்மாணப் பணி தொடர்பான விவரம் தெளிவுபடுத்தப்பட்டது.

அதனைத் தொடர்ந்து மரக்கன்று நடுகை நடைபெற்றது.

இந்த நிகழ்வில் மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர், பிரதேச செயலாளர்கள், உத்தியோகத்தர்கள், பொலிஸார், இராணுவத்தினர் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

இதனிடையே நீண்ட காலமாக பிரதான பாலத்துக்கு அருகில் அமைக்கப்பட்டிருந்த இராணுவச் சோதனைச் சாவடி மற்றும் இராணுவ முகாம் என்பன அண்மையில் அகற்றப்பட்டு காணி மன்னார் நகர சபையிடம் கையளிக்கப்பட்டது. (எ)

# ஏ - 9 வீதியில் நேற்று விபத்து இளைஞர்கள் இருவர் காயம்

கிளிநொச்சி, ஒக். 22

கிளிநொச்சியில் ஏ - 9 வீதியில் நேற்றுக் காலை மோட்டார் சைக்கிள், துவிச்சக்கரவண்டியுடன் மோதி விபத்து ஏற்பட்டது.

கிளிநொச்சியிலிருந்து முறிகண்டி நோக்கிப் பயணித்த மோட்டார் சைக்கிள், வீதியைக் கடக்க முயன்ற துவிச்சக்கர வண்டியுடன் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றது.

இந்தச் சம்பவத்தில் துவிச்சக்கரவண்டியில் பயணித்த இளைஞர்கள் இருவர் காயமடைந்த நிலையில் கிளிநொச்சி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இந்த விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை கிளிநொச்சி பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (எ)

# தமிழர்களின் ஆயுதப் போராட்டம் நூல் பற்றி யாழில் அறிமுக நிகழ்வு

யாழ்ப்பாணம், ஒக். 22

சுவீடன் நாட்டின் கோதம் பேர்க் பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் பார்ட் க்லெம் எழுதிய "இறைமை பற்றிய அபிலாசைகளை நிகழ்த்திக் காட்டுதல்: இலங்கையிலே தமிழர்களின் ஆயுதப் போராட்டமும் போருக்குப் பிந்தைய நிலைமாற்றமும்" என்ற நூல் பற்றிய அறிமுக நிகழ்வு நாளை புதன்கிழமை பிற்பகல் 2 மணிக்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ளது.

மொழியியல் ஆங்கிலத் துறையினரால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்த நிகழ்வில் நூலாசிரியர் பார்ட் க்லெம், நூல் பற்றிய தனது அறிமுக உரையை நிகழ்த்துவார். அதனையடுத்து சட்டத்தரணியும், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் முன்னாள் சட்டத்துறை தலைவருமான கலாநிதி குமாரவடிவேல் குருபரன், சமூகவியற் துறையின் சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி அகிலன் கதிர்காமர் ஆகியோரும் நூல் பற்றிய தமது கருத்துரைகளை வழங்குவர். (எ)

# முல்லைத்தீவு வன்னிவிளாங்குளம் மாவீரர் துயிலுமில்லத்தில் சிரமதானம்





முல்லைத்தீவு, ஒக். 22

முல்லைத்தீவு வன்னிவிளாங்குளம் மாவீரர் துயிலும் இல்லத்தில் நேற்றுச் சிரமதானப் பணி முன்னெடுக்கப்பட்டது.

நவம்பர் 27 ஆம் திகதி நடைபெறவுள்ள மாவீரர் நினைவு நாளை முன்னிட்டு சிரமதானப் பணி முன்னெடுக்கப்பட்டது.

வன்னிவிளாங்குளம் மாவீரர் துயிலும் இல்லப் பணிக்குழுவின் ஏற்பாட்டில் இந்த சிரமதானப் பணி நடைபெற்றது.

இதில், மாவீரர்களின் பெற்றோர்கள், பணிக்குழுவினர் பங்கேற்றனர். (எ)

# யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்துக்கு புதிய செயலாளர்

யாழ்ப்பாணம், ஒக். 22

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் புதிய பொதுச் செயலாளராக கலைப்பீடத்தைச் சேர்ந்த சி. சிவகஜன் தெரிவு செய்யப்பட்டுள்ளார். இதுவரை காலமும் பொதுச் செயலாளராகப் பொறுப்பு வகித்த சோ. சிந்துஜனின் பதவிக்காலம் நிறைவடைந்த நிலையில் சிவகஜன் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

மேலும், யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் பல்கலைக்கழகத்தின் 12 பீடங்களினதும் மாணவர் ஒன்றியங்களை ஒருங்கிணைத்து செயல்பட்டு வருகின்றது. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இணைய வழி மோசடிகள் குறித்து 9 மாதங்களில் 8,000 முறைப்பாடு!

## கணினி அவசர தயார் நிலைக் குழு

கொழும்பு, ஒக். 22

**வருடத்தின் கடந்த 9 மாதங்களில் இணைய வழி மோசடிகள் தொடர்பில் 8,000 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளதாக இலங்கை கணினி அவசர தயார் நிலைக் குழு தெரிவித்துள்ளது.**

இணையத்தில் மேற்கொள்ளப்படும் நிதி முறைகேடுகள் மற்றும் பேஸ்புக் தொடர்பான முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளதாக அந்தக் குழு தெரிவித்துள்ளது.

கடந்த மாதத்தில் மாத்திரம் சுமார் 300 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன.

இணையத்தின் ஊடாக பொதுமக்களின் நிதியைத் திட்டமிடப்பட்ட வகையில் மோசடி செய்யும் சம்பவங்கள் தொடர்பான பல தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்தநிலையில், இணைய வழி ஊடாக நிதி மோசடியில் ஈடுபட்ட 200க்கும் அதிகமான வெளிநாட்டவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த வெளிநாட்டவர்கள் இலங்கையிலிருந்து வெளிநாட்டில் உள்ள நபர்களிடமிருந்து நிதி மோசடியில் ஈடுபட்டுள்ளனர்.

அதேநேரம் கைதான வெளிநாட்டவர்கள் சுற்றுலா விஸா மூலம் இலங்கைக்கு வருகைதந்துள்ளமை விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இதேவேளை, தேசிய அடையாள அட்டைகள், பிறப்புச் சான்றிதழ்கள் மற்றும் பரீட்சை பெறுபேறுகளை இணையத்தளங்கள் மற்றும் பேஸ்புக் உள்ளிட்ட சமூக ஊடகங்கள் வாயிலாக வெளியிடுவது மோசடிகளுக்கு வழிவகுக்கும் என இலங்கை கணினி அவசர தயார் நிலைக் குழுவின் சிரேஷ்ட தகவல் பாதுகாப்பு பொறியியலாளர் சாருக தமுனுபொல தெரிவித்தார். (அ)

# தொலைபேசி அழைப்பு மூலம் இடம்பெறும் நிதி மோசடிகள்!

## பொலிஸ் ஊடகப் பிரிவு எச்சரிக்கை

கொழும்பு, ஒக். 22

போலி தொலைபேசி அழைப்புகளின் ஊடாக இடம்பெறும் நிதி மோசடிகள் தொடர்பில் தகவல்கள் வெளியாகியுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இலங்கை போக்குவரத்து சபையின் டிப்போக்களுக்கு அழைப்புகளை மேற்கொண்டு அவற்றின் முகாமையாளர், சிரேஷ்ட அதிகாரிகள் அல்லது ஊழியர்கள் விபத்துக்களில் சிக்கியுள்ளதாகவும் அவர்கள் பயணித்த வாகனங்களை திருத்துவதற்காக ஒருதொகை பணம் தேவைப்படுவதாகவும் தெரிவித்து மோசடிகள் இடம்பெறுவததாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதற்காக அவசரமாக 10,000 வைப்பிலிடுமாறு தெரிவித்து தொலைபேசி இலக்கங்கள் வழங்கப்பட்டுள்ள பல சம்பவங்கள் பதிவாகியுள்ளதாகவும் பொலிஸார் கூறினர்.

இவ்வாறு 09 டிப்போக்களுக்கு போலி தொலைபேசி அழைப்புகள் மேற்கொள்ளப் பட்டுள்ளததாக பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த தொலைபேசி இலக்கங்கள் தொடர்பில் ஆராய்ந்த போது அவை உயிரிழந்தவர்களின் அல்லது வெளிநாட்டவர்களுக்கு சொந்தமானதென தெரியவந்துள்ளதாகவும் பொலிஸார் சுட்டிக்காட்டினர். (அ)

# உள்ளூராட்சி மன்றத் தேர்தலும் நடத்தப்படுவதற்கான சாத்தியம்

கொழும்பு, ஒக். 22

பாராளுமன்றத் தேர்தல் நிறைவடைந்து 35 முதல் 40 நாட்களுக்குள் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் நடத்தப்படுவதற்கான சாத்தியம் காணப்படுவதாகத் தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.


கண்டியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் எழுப்பப்பட்ட கேள்விகளுக்குப் பதிலளிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

இதன்படி உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தொடர்பில் நீதிமன்ற உத்தரவு பிறப்பிக்கப் பட்டுள்ளதாகவும், அதற்கமைய பாராளுமன்றத் தேர்தல் நிறைவடைந்ததன் பின்னர் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் நடத்தப்படும் எனவும் தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் குறிப்பிட்டார். (அ)

# தமிழ்ப் பொதுக்கட்டமைப்பின் ஜனாதிபதி தேர்தல் செலவின அறிக்கை தேர்தல்கள் ஆணையகத்துக்கு!

யாழ்ப்பாணம், ஒக். 22

தேர்தல்கள் ஆணையகத்தில், தமிழ்ப் பொதுக்கட்டமைப்பால், வரவு-செலவு அறிக்கை, சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என, ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்ப் பொதுவேட்பாளராகப் போட்டியிட்ட பா.அரியநேத்திரன் தெரிவித்துள்ளார்.



ஒக்ரோபர் 13ஆம் திகதி, மின்னஞ்சல் ஊடாக, ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டமைக்கான, வரவு-செலவு அறிக்கையினை தமிழ்ப் பொதுக்கட்டமைப்பு, ஆணையகத்தில், சமர்ப்பித்துள்ளதாக அவர் கூறினார்.

தமிழ்ப் பொதுவேட்பாளரை, நிறுத்திய தரப்புக்கள், ஆணையகத்தில், வரவு-செலவு அறிக்கையைச் சமர்ப்பிக்கவில்லை என முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் எழுப்பிய கேள்விக்கே பா.அரியநேத்திரன் இவ்வாறு பதிலளித்தார். (அ)

# லொஹானின் செயலாளர் உயிரிழப்பு; விசாரணை சி. ஐ. டியிடம் ஒப்படைப்பு

கொழும்பு, ஒக். 22

முன்னாள் இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்தவின் பிரத்தியேக செயலாளர் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி உயிரிழந்தமை தொடர்பான விசாரணைகள் குற்றப்புலனாய்வு திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

முன்னாள் இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்தவின் கட்டுகஸ்தோட்டை மஹய்யாவ பகுதியிலுள்ள அலுவலகத்துக்கு அருகிலுள்ள வீட்டில் அவரது பிரத்தியேக செயலாளர் துப்பாக்கிச்சூட்டுக்கு இலக்காகி நேற்று முன் தினம் பகல் உயிரிழந்தார்.

அவர் தற்கொலை செய்து கொண்டமை விசாரணைகளின் மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இது குறித்து ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதி பொலிஸ் மா அதிபர் நிஹால் தல்துவ-

கட்டுகஸ்தோட்டை, மஹய்யாவ பகுதியில் உள்ள ரத்வத்தவின் அலுவலகத்திற்கு அருகில் உள்ள கட்டிடத்தில் 50 வயதுடைய நபர் துப்பாக்கிச் சூட்டு காயங்களுடன் காணப்பட்டார்.

பின்னர் வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப் பட்ட நிலையில் அவர் உயிரிழந்தார்.

குறித்த அலுவலகத்தில் தான் ரத்வத்தவின் பிரத்தியேக செயலாளர் கடமையாற்றியதுடன், அவருக்கு வழங்கப்பட்ட உத்தியோகபூர்வ துப்பாக்கியால் அவர் தன்னைத்தானே சுட்டு தற்கொலை செய்து கொண்டுள்ளார்.

உயிரிழந்தவர் வெரல்லகம பகுதியைச் சேர்ந்த 50 வயதுடையவர்-என்றார். (அ)

# காணாமல்போன மாணவிகளில் ஒருவர் ஆற்றில் சடலமாக மீட்பு!

கொழும்பு, ஒக். 22

காணாமல்போயிருந்ததாகக் கூறப்படும் கந்தேகெதர பகுதியைச் சேர்ந்த 17 வயதுடைய 2 மாணவிகளில் ஒருவர், மஹியங்கனை - லொக்கல் ஓயாவிலிருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். ஒரே பாடசாலையில் கல்வி கற்றுவந்த, இரு மாணவிகள், பதுளை நகருக்கு மேலதிக வகுப்புக்குச் செல்வதாகக் கூறி நேற்று முன் தினம் காலை வீட்டிலிருந்து புறப்பட்டுச் சென்றிருந்தனர்.

எனினும், அவர்கள் வீடு திரும்பாதமையினால், அவர்களது பெற்றோர் பதுளை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர்.

இந்தநிலையில், அதாவுல்பத்த பகுதியில் வீதியோரமாக நின்றிருந்தபோது நேற்று முன் தினம் இரவு கண்டுபிடிக்கப் பட்ட அவர்களில் ஒரு மாணவி, நபர் ஒருவரால் ரிதீமாலியத்த பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

இவ்வாறானதொரு பின்னணியிலேயே மற்றைய மாணவி, சடலமாக நேற்று காலை மீட்கப்பட்டுள்ளதாக மஹியங்கனை பொலிஸார் குறிப்பிட்டனர். (அ)

# இரு இளைஞர்கள் நீரில் மூழ்கி பலி!

கொழும்பு, ஒக். 22

அனுராதபுரம் - கஹட்டகஸ்திஹிலிய பகுதியில் நீராடச் சென்ற இருவர் நீரில் மூழ்கி உயிரிழந்தனர்.

உயிரிழந்தவர்கள் பொல்கஹவலை மற்றும் பூஜாபிட்டி ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 24 மற்றும் 34 வயதுடையவர்கள் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

குறித்த இருவரும், மேலும் இருவருடன் மதுபானம் அருந்தியதன் பின்னர், இஹல கங்ஹிந்திகம பகுதியிலுள்ள வாவியில் நீராடச் சென்றிருந்தபோது இவ்வாறு நீரில் மூழ்கியுள்ளதாக விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கஹட்டகஸ்திஹிலிய பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (அ)

# எதிர்வரும் 24,25,26ஆம் திகதிகளில் விசேட டெங்கு ஒழிப்பு செயல்பாடு

கொழும்பு, ஒக். 22

எதிர்வரும் 24, 25 மற்றும் 26 ஆம் திகதிகளில் விசேட டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

நாட்டில் நிலவும் மழையுடனான காலநிலை காரணமாக ஏற்பட்ட வெள்ளத்தில் பாதிப்புக்குள்ளான பகுதிகளை இலக்காகக் கொண்டு இந்த வேலைத் திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

இதற்கமைய, வெள்ளம் காரணமாக அதிக பாதிப்புகளை எதிர்கொண்ட கொழும்பு மற்றும் கம்பஹா ஆகிய மாவட்டங்களில் உள்ள 22 சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளை மையப்படுத்தி இந்த டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டம் அமுல் படுத்தப்படவுள்ளது.

இதனிடையே, நாடளாவிய ரீதியில் இந்த வருடத்தின் இது வரையான காலப்பகுதியில் 41 ஆயிரத்து 212 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர். (அ)

# மீனவர்களுக்கு எச்சரிக்கை

கொழும்பு, ஒக். 22

வங்காள விரிகுடாவின் மத்திய கிழக்கு ஆழ் கடற்பகுதியில் நெடுநாள் மீன்பிடி படகுகளில் கடற்றொழிலில் ஈடுபட்டுள்ள மீனவர்கள் எச்சரிக்கையாகச் செயற்படுமாறு வளிமண்டலவியல் திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது.

வங்காள விரிகுடாவின் மத்திய கிழக்குப் பகுதியிலும் வடக்கு அந்தமான் பகுதியிலும் குறைந்த காற்றழுத்த வலயம் உருவாகியுள்ளதன் காரணமாக இந்த அறிவுறுத்தல் விடுக்கப் பட்டுள்ளது. குறித்த குறைந்த காற்றழுத்த நிலைமை இன்று தாழமுக்கமாக மாறக்கூடும் எனவும் அது நாளை சூறாவளியாக மாறக்கூடிய வாய்ப்புள்ளதாக எனவும் அந்த திணைக்களம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, தென் மாகாணத்தில் சில இடங்களில் 100 மில்லிமீற்றர் வரையான பலத்த மழைவீழ்ச்சி பதிவாகக் கூடும் என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

அத்துடன், மேல், சப்ரகமுவ மற்றும் வடமேல் மாகாணங்களிலும், திருகோணமலை மாவட்டத்திலும் இடைக்கிடையே இடியுடன் மழை பெய்யக்கூடும் என அந்த திணைக்களம் தெரிவித்துள்ளது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் அரசு கட்சி தனிநபரின் கம்பனியாக மாறிவிட்டது!

## கே.வி.தவராசா ஆவேசம்

யாழ்ப்பாணம், ஒக். 22

**ஜனநாயக தமிழரச கூட்டமைப்பு எனும் பெயரில் ஒரு கட்சியை உருவாக்கி நாங்கள் உங்களிடம் வாக்கு கேட்டு வர வேண்டிய சூழ்நிலையை இலங்கை தமிழரசுக் கட்சி ஏற்படுத்தியிருக்கின்றது. நாங்கள் விரும்பி வெளியில் வர வில்லை என ஜனநாயக தமிழரசுக் கூட்டமைப்பின் முதன்மை வேட்பாளரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான கே.வி.தவ ராசா தெரிவித்தார்.**



நேற்று முன்தினம் வலிகாமம் மேற்கு பிரதேச சபையின் மண்டபத்தில் நடைபெற்ற தேர்தல் பிரசார நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையி லேயே அவரை இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

16 ஆண்டுகள் தமிழரசுக் கட்சியின் உள்ளே இருந்தேன். இதன்போது மத்திய குழு, அரசியல் குழு மற்றும் சட்டக் குழுவின் பல குழுக்களில் இருந்தேன். கட்சிக்கு வரும் வழக்குகளுக்கும் நான் நீதிமன்றத்தில் ஆஜராகி இருந்தேன். அரசியல் கைதிகளான குட்டிமணி, தங்கத்துரை ஆகியோரது வழக்குகளில் இருந்து இதுவரை ஆயிரத்திற்கும் மேற்பட்ட, அரசியல் கைதிகளின் வழக்குகளில் நான் ஆஜ ராகி உள்ளேன். வாதாடிய வழக்குகளில் எவருமே சிறை செல்ல வில்லை.

இலங்கை தமிழரசுக் கட்சியானது தற்போது ஒரு தனி நபருடைய கம்பனியாக மாறி இருக்கின்றது. அந்த நபர் இவ்வாறு சர்வதிகாரம் மிக்க நிலையில் செயல்படுவதற்காக தலைமைத்துவமும், சம்பந்தரும் காரணமாக உள்ளனர். கட்சிக்குள் இருந்த அனைவரையும் விலக்கி விட்டு தனது தனியான கட்டுக் கோப்புக்குள் கட்சியை வைத்தி ருக்கின்றார்.

கட்சியின் தலைவர் தேர்தலில் சிறீதரன் வெற்றி பெற்றிருந்தார். இருந்தாலும் அவருக்கான பதவி வழங்கப்படாது, நீதிமன்றத்தில் வழக்கு இருக்கின்றது.

தமிழ் தேசியம் தான் எமது தமிழரசு கட்சியின் தாரக மந்திரம். தமிழ் தேசியமானது பாதுகாக்கப்படவேண்டும். நாங்கள் இல்லாவிட்டாலும் கூட அடுத்த தலைமுறையிடம் அதனை ஒப்படைத்துவிட்டு செல்ல வேண்டும். ஆனால் தமிழரசு கட்சிக்குள் அது நடைபெறவில்லை.

கட்சிக்குள் இத்தனை பேர் இருந்தும் ஏன் எதனையும் செய்யவில்லை என நீங்கள் கேட்கக் கூடும். கட்சிக்குள் இருந்த ஒவ்வொருவரும் ஒவ்வொரு பதவிகளுக்கான ஆசைகளில் இருந்தார்கள். மாகாண சபை தேர்தல் வந்தால் அந்த தேர்தலில் முதலமைச்சர் யார், அமைச்சர்கள் யார், பிரதேச சபை தேர்தல்களில் போட்டியிடுபவர்கள் யார் என அவர்களுக்கு பதவி வழங்கப்பட்டு விட்ட நிலையில் அவர்கள் அனைவரும் அமைதியாகி விட்டார்கள். இவ்வாறான சூழ்நிலையில் தான் கட்சியை நடத்த முடியாது என நான் வெளியேறி வந்தேன்.


நான் ஆறாம் திகதி கட்சியை விட்டு வெளியேறி வந்த பின்னர் பலர் என்னிடம் கேட்டார்கள் ஏன் கட்சியை விட்டு வெளியேறினீர்கள், கட்சிக்கு உள்ளே இருந்து சரி செய்திருக்கலாம் தானே என்று. எட்டாம் திகதி தலைவர், தான் வகித்த சகல பதவிகளிலும் இருந்து விகுகின்றார். இது ஒருவருடைய சர்வாதிகாரப் போக்கை காட்டுகின்றது.

கட்சியின் செயலாளர் பதவியினை சுமந்திரன் கோரினார். ஆனால் அவருக்கான பலவி மறுக்கப்பட்டது. இதன் போது சுமந்திரன் அவர்கள் நாங்கள் இரண்டு அணி என கூறினார். இப்போது தேர்தல் வரும்போது நாங்கள் ஒரு அணி என கூறுகின்றார். வீட்டுக்குள் என்ன நடக்கின்றது-என்றார். (அ-05)

# ஒன்று அல்லது இரண்டு ஆசனங்களை வன்னி மாவட்டத்தில் நாம் வெல்வோம்!

## சித்தார்த்தன் நம்பிக்கை

வவுனியா, ஒக். 22



வன்னி தேர்தலில் ஒன்று அல்லது இரண்டு ஆசனங்களை பெற்று நிச்சயமாக முன்னணி இடத்தினை அடைவோம் என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தன் தெரிவித்தார்.

ஜனநாயக தமிழ்த்தேசிய கூட்டணியின் தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் வேட்பாளர் அறிமுக நிகழ்வில் கலந்து கொண்டு ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கும்போது இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

எங்கள் கட்சி உறுப்பினர்கள் அனைவரையும் அழைத்து பாராளுமன்றத் தேர்தலை எவ்வாறு முகம் கொடுப்பது தொடர்பாகவும் வன்னி தேர்தல் மாவட்டத்தில் போட்டியிடும் எமது இரு வேட்பாளர்களை ஆதரிக்க வேண்டும் என்பதையும் தெரிவிப்பதற்காகவே இக்கூட்டத்தை ஏற்பாடு செய்துள்ளோம்.

தேர்தல் பிரசாரத்தை எமது கட்சி உறுப்பினர்கள் மட்டுமின்றி ஏனையவர்களுக்கு வன்னியில் முன்னெடுத்து வருகின்றனர்.

பாராளுமன்றத் தேர்தலை பொறுத்தவரை ஜனநாயக தமிழ் தேசியக் கூட்டணி ஒரு முன்னிலையில் காணப்படும் கட்சியாக பார்க்கப்படுகின்றது. குறிப்பாக தமிழ் மக்கள் பொருத்தவரை இக் கட்சியினை தங்களுடைய கட்சியாகவே பார்க்கின்றனர்.

மேலும் வன்னித் தேர்தலில் வரக்கூடிய ஆசனங்களில் ஒன்று அல்லது இரண்டு ஆசனங்களை பெற்று நிச்சயமாக முன்னணி இடத்தினை அடைவதற்கான முயற்சிகளை மேற்கொள்வோம்.

இத்தேர்தலில் ஒரு ஆசனம் கிடைத்தாலும் அது எங்களது வெற்றியாகவே பார்க்கின்றோம்.

குறிப்பாக தமிழ் மக்களின் ஒரு கட்சியாகவும் தமிழ் மக்களின் விடுதலைக்கான பாதையைக் காட்டக்கூடிய கட்சியாகவும் தமிழ் மக்கள் ஏற்றுக்கொண்டிருக்கின்றனர்.

நடைபெறவுள்ள பாராளுமன்ற தேர்தலில் ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி வெல்லவேண்டும் என்பதே எங்களது நோக்கமாக இருக்கின்றது.

தமிழ் கட்சிகளை பொறுத்தவரை பிரிந்து இருக்கின்றன. முக்கியமாக தமிழரசுக் கட்சி இரண்டாகவும் தமிழ் தேசிய கூட்டமைப்பு என்றால் மூன்றாக பிரிந்து நிற்கின்றன.

மேலும் தமிழரசு கட்சி இருவராக பிரிந்து போட்டியிடுகின்றனர். நாங்கள் ஒருவராக போட்டியிடுகின்றோம். கடந்த தேர்தலிலே 40இற்கு மேற்பட்ட கட்சிகள் மற்றும் சுயேச்சை குழுக்கள் போட்டியிட்டு இருந்தன. இந்நிலைமை இங்கு மட்டுமின்றி ஏனைய இடங்களிலும் அதிகமாகவே இருந்தது. தற்போது இந்நிலை சற்று அதிகமாக காணப்படுவதோடு அதிகளவான வேட்பாளர்கள் தற்போது போட்டியிடுகின்றனர். இந்நிலையிலே மக்கள் தங்களுக்கு எந்த கட்சி தேவை அல்லது எந்த கட்சி தங்களது பிரச்னைகளை சரியான முறையிலே கையாளும் என்பதை தெளிவாகத் புரிந்து கொண்டவர்கள்.

தற்போதைய தேர்தலிலே பல காரணங்களுக்காக சுயேச்சைக் குழுக்களில் பலர் போட்டியிட்டாலும் மக்கள் அவர்களுக்கு வாக்களிப்பதில்லை. குறிப்பாக இது கடந்த கால தேர்தல்களிலும் காணக்கூடியதாக இருந்ததோடு தற்போதைய தேர்தலிலும் இருக்கும் என்றாலும் கட்சிகளின் மத்தியிலே எங்களது கட்சி முன்னணியில் இருக்கும் என நம்புகின்றேன்.

கடந்த காலங்களில் தமது உயிர்களையும் துச்சம் எண்ணி போராடிய ஐந்து கட்சிகளை உள்ளடக்கி ஒரு கூட்டமைப்பாக தமிழ் மக்கள் விரும்புகின்ற ஒற்றுமையுடன் பயணிக்கின்ற ஒரு கட்சியாக ஜனநாயக தமிழ் தேசியக் கூட்டணி போட்டியிடுகின்றது.

கடந்த காலங்களைப் போல் அல்லாமல் ஐந்து கட்சிகள் இணைந்து தேர்தல் ஆணைக் குழுவில் ஒரு கட்சியாக பதியப்பட்டு பயணிக்கின்றோம். எங்களுக்குள்ளே சில சில பிரச்னைகள் தேர்தல் காலத்தில் ஏற்பட்டிருந்தாலும் கூட தமிழ் மக்களின் பிரச்னைகளில் ஒன்றாக நிற்பதோடு தமிழ் மக்களின் விடுதலைக்காக ஒன்றாக உழைப்பதோடும், கடந்த காலங்களிலே இக்கூட்டணியில் உள்ள கட்சிகள் பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் போது இப்பிரதேசங்களில் பொருளாதார அபிவிருத்திக்காக உழைத்திருக்கின்றோம்-என்றார். (அ)

# ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணியின் வேட்பாளர் அறிமுக நிகழ்வு வவுனியாவில்

வவுனியா, ஒக். 22

ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணியில் அங்கம் வகிக்கும் தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் வேட்பாளர் அறிமுக நிகழ்வும் கட்சி ஆதரவாளர்களுடனான கலந்துரையாடலும் நேற்று முன் தினம் வவுனியாவில் இடம்பெற்றது.

கட்சியின் மத்தியகுழு உறுப்பினர் மோகன் தலைமையில் நிகழ்வு இடம்பெற்றது.

இதன்போது கட்சியின் ஸ்தாபகர் உமாமகேஸ்வரனின் திருவுருவப்படத்திற்கு விளக்கேற்றி அஞ்சலி செலுத்தப்பட்டு நிகழ்வு ஆரம்பமானது.

இதன்போது வேட்பாளர்களின் அறிமுகம் இடம்பெற்றதுடன் எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தல் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது.

நிகழ்வில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தன், முன்னாள் மாகாணசபை உறுப்பினர் கந்தையா சிவநேசன், வேட்பாளர் வைரமுத்து திருச்செல்வம் மற்றும் கட்சியின் முக்கியஸ்தர்கள் கட்சி ஆதரவாளர்கள் என பலர் கலந்து கொண்டனர். (அ)

# ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணி முல்லைத்தீவில் தேர்தல் பரப்புரை

முல்லைத்தீவு, ஒக். 22

ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணியில் போட்டியிடும் கருணாநிதி யசோதினிக்கு ஆதரவான தேர்தல் பரப்புரை கூட்டம் நேற்று முன் தினம் முல்லைத்தீவு வன்னிவிளாங்குளம் பகுதியில் இடம்பெற்றது.

முன்னாள் பெண் போராளியான கருணாநிதி யசோதினி ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணியில் வன்னி தேர்தல் மாவட்டத்தில் போட்டியிடுகின்றார்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் வன்னிவிளாங்குளம் பகுதியில் போராளிகள் நலன் புரிச்சங்கச் செயற்பாட்டாளர் கரன் தலைமையில் தேர்தல் பரப்புரை கூட்டம் இடம்பெற்றது.

இக்கூட்டத்தில் யாழ் மாவட்ட போராளிகள் நலன்புரி சங்கத் தலைவர் ஈஸ்வரன், கவிஞர் மாணிக்கம் ஜெகன், முன்னாள் போராளி ஐங்கரன், பொதுமக்கள் பங்கேற்றனர். (அ)

# தமிழ்த் தேசியம் மட்டுமே ஈழத்தமிழர் அடையாளம்

## கூறுகின்றார் சிறிதரன்

கிளிநொச்சி, ஒக். 22

ஈழத் தமிழர்களை அரசியல் வெறுமை சூழ்ந்த காலத்தில் இனத்துக்கே அடையாளம் தந்த "தமிழ்த் தேசியத்தை" கொள்கையாக வரித்து நாம் ஆரம்பித்த அரசியல் பயணத்தை அதே தளத்தில் நின்று பிறழாத பிரதிநிதிகளாக இதுவரை காலமும் முன்னெடுத்திருக்கிறோம் என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும், இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் யாழ். தேர்தல் மாவட்ட முதன்மை வேட்பாளருமான சிவஞானம் சிறிதரன் தெரிவித்தார்.

கிளிநொச்சி நகர வட்டார சமூக மட்ட அமைப்புகளின் ஏற்பாட்டில் நடைபெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

தமிழ்த் தேசியம் மட்டும் ஈழத் தமிழர்களுக்கான அடையாளம். அத்தகைய அடையாளத்தை நிரந்தரமாக பேணும் வகையிலான அரசியல் செல்நெறிகளின் மூலம் இனத்தின் இறைமையை மீட்கும் என் அரசியல் பணியும் பயணமும் தொடரும்.

எங்கள் அடையாளங்களை இழக்கத் துணியும் எந்த மாற்றங்களுக்கும் எமது இளைய தலைமுறையினர் உட்பட்டு விடக்கூடாது-என்றார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெப்ரவரியில் பட்ஜெட் முன்வைப்பு சம்பள உயர்வு குறித்தும் ஆராய்வு!

## ஜனாதிபதி அனுர அறிவித்தார்



கொழும்பு, ஒக். 22

**2025 ஆம் ஆண்டுக்கான வரவு- செலவுத் திட்டம் எதிர் வரும் மார்ச் மாதம் முன்வைக்கப்படும் எனவும், அரச ஊழியர்களுக்கான சம்பள உயர்வு தொடர்பில் அவதானம் செலுத்தப்பட்டுள்ளது எனவும் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.**

தங்காலை பகுதியில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு-

டிசெம்பர் மாதம் இடைக்கால கணக்கறிக்கை முன்வைக்கப்படும். அதன்பின்னர் எதிர்வரும் பெப்ரவரி, மார்ச் மாதமளவில் வரவு-செலவுத் திட்டத்தை முன்வைப்பதற்கு திட்டமிட்டுள்ளோம்.

அந்த வரவு- செலவுத் திட்டத்தில் அரச ஊழியர்களின் சம்பளத்தை அதிகரிப்பது தொடர்பில் அவதானம் செலுத்தியுள்ளோம். வறுமையான மக்கள், ஊனமுற்றோருக்கு வழங்கப்படும் கொடுப்பனவு அதிகரிக்கப்படும்.

இலங்கைக்கு அதிகளவு சுற்றுலாப் பயணிகள் வருகை தந்த ஆண்டாக 2025 ஆம் ஆண்டை மாற்றியமைப்போம்.

எப்போதும் கொடுப்பனவு மற்றும் நிவாரணத்தால் வாழும் மக்கள் கூட்டத்தைவிட, அவர்களை பொருளாதார ரீதியில் வலுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். அதற்குரிய திட்டங்களும் பாதீட்டில் முன்வைக்கப்படும்-என்றார். (அ)

# யாரையேனும் பாதுகாக்க எத்தனிக்கின்றதா அரசு?

## காவிந்த ஜெயவர்த்தன கேள்வி



கொழும்பு, ஒக். 22

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் பற்றிய அறிக்கைகள் வெளிப்படுத்தப்படாமையின் பின்னணியில் அரசாங்கம் எவரையேனும் பாதுகாக்க எத்தனிக்கின்றதா என்ற சந்தேகம் எழுந்துள்ளதாக, முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் காவிந்த ஜெயவர்த்தன தெரிவித்துள்ளார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் தலைமையகத்தில் இடம்பெற்ற கூட்டத்தில் அவர் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

எவரையேனும் பாதுகாக்கும் நோக்கிலா அரசாங்கம் உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் பற்றிய அறிக்கையை வெளியிட மறுக்கின்றது என்ற சாதாரண சந்தேகம் எமக்கு எழுகின்றது. ஆகவே உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பான ஜனாதிபதி விசாரணை அறிக்கைகளை முழுமையாக நாட்டு மக்களுக்கு வெளிப்படுத்துமாறு அரசாங்கத்திடம் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றோம்.

இந்த விடயத்தில் அமைச்சர் விஜித ஹேரத் அறிக்கைகள் எவ்வாறு கம்மன்பிலவுக்கு கிடைக்கப்பெற்றது என்பது தொடர்பில் விசாரணை நடத்த வேண்டும் என கூறுகின்றார். இந்த விடயத்தின் ஊடாக அவர்களிடம் அந்த அறிக்கைகள் முழுமையாக இருக்கின்றமை வெளிப்படுகின்றது-என்றார். (அ)

# பெண்கள், சிறுவரின் அடிப்படை உரிமைகளை பாதுகாக்க சட்டம்

## சஜித் பிரேமதாஸ கூறுகிறார்

கொழும்பு, ஒக். 22

பெண்கள் மற்றும் சிறுவர்களின் அடிப்படை உரிமைகளைப் பாதுகாக்கும் வகையில் புதிய சட்டம் வகுக்கப்பட வேண்டும் என ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

இரத்மலானையில் நடைபெற்ற ஐக்கிய மக்கள் சக்தியின் இரத்மலானை தேர்தல் தொகுதி கட்சி செயற்பாட்டாளர்களுடனான சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

நாட்டில் நாளுக்கு நாள் குழந்தைகள், சிறுவர்கள் தாய்மார்கள் மற்றும் பெண்களின் உரிமைகள் மீறப்படுவதைக் காணமுடிவதாகவும் சுகாதார அமைச்சின் அறிக்கைகளின்படி, குழந்தைகளின் ஊட்டச்சத்து குறைபாடு குறித்த செய்திகள் நம்பிக்கை தருவதாக இல்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார். சிறுவர், பெண்களின் உரிமைகள் வலுவாக பாதுகாக்கப்பட வேண்டும் எனவும் அவர்களின் உரிமைகள் அடிப்படை உரிமையாக பாதுகாக்கப்பட வேண்டும் என்று சஜித் கூறினார்.

ஆரோக்கியமான சிறுவர் தலைமுறை மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வளர்ச்சிக்கும் பங்களிக்கும் ஒன்றாக அமைந்து காணப்படுவதாகவும் தாய்மார்கள் மற்றும் பெண்களின் போசாக்கின்மை, சிசுக்களின் போசாக்கின்மை மற்றும் குழந்தைகளின் போசாக்கின்மை வளர்ச்சி ஆகியவை ஆரோக்கியமான தலைமுறை உருவாக்கத்தில் கடுமையான பாதிப்பை ஏற்படுத்தவதாகவும் சஜித் குறிப்பிட்டார்.

ஈஸ்டர் தாக்குதல், கொரோனா கோவிட் மற்றும் பொருளாதாரப் பிரச்சினை ஆகிய மூன்று பாதிப்புகள் கடுமையான பிரச்னைகளை உருவாக்கியுள்ளதாகவும். இதனால், குழந்தைகள், சிசுக்கள், தாய்மார்கள், பெண்கள் என அனைத்து தரப்பினரும் பாதிக்கப்படுவதாகவும அவர் கூறினார்.

பெண்களின் உரிமைகள் கூட தொடர்ந்து மீறப்பட்டு வருவதாகவும் வீட்டில், வீதியில், வேலை செய்யும் இடங்களில் பெண்கள் துன்புறுத்தப்படுவதாகத் தெரிவித்த அவர். 52 சதவீத பெண்கள் வன்முறையால் பாதிக்கப்படுவதால், தாய்மார்கள், பெண்கள் மற்றும் சிறுவர்களை மையமாக் கொண்ட புதிய சட்டம் இயற்றப்படவேண்டும் எனவும் தெரிவித்தார். (அ)

# உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் முறையான விசாரணைக்கு பணிப்புரை

## ஜனாதிபதி அநுரகுமார தெரிவிப்பு



கொழும்பு, ஒக். 22

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் முறையான விசாரணைகளை ஆரம்பிக்குமாறு பதில் பொலிஸ் மாஅதிபர் மற்றும் குற்றப் புலனாய்வு திணைக்களத்திற்கு பணிப்புரை விடுத்துள்ளதாக ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

கட்டுநாயக்கவில் நேற்று முன் தினம் தேசிய மக்கள் சக்தி ஏற்பாடு செய்திருந்த மக்கள் பேரணியில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

நாங்கள் பொலிஸ் திணைக்களத்தை விசாரணைக்கு ஏற்ற துறையாக மாற்றினோம்.

இதனால் பலர் தற்போது குழம்பியுள்ளனர்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதலில் இருந்து ஆட்சியைப் பிடிக்க முயற்சித்தவர்கள் இன்று 5 ஆண்டுகளுக்கு பின்னரே விழித்துள்ளனர்.

இப்போது அந்த அறிக்கை கொடு, இந்த அறிக்கை கொடு என்கிறார்கள்.

அந்த இரண்டு அறிக்கைகளும் ரணில் விக்கிரமசிங்கவின் அறிக்கைகள்.

அது இரண்டும் விசாரணைக் குழுக்கள் அல்ல.

நான் வந்ததும் அந்த அறிக்கைகளுக்கு என்ன நடந்தது என்று முன்னாள் ஜனாதிபதியின் செயலாளரிடம் கேட்டேன்.

இந்த விசாரணையை நசுக்கவே ரணில் விக்கிரமசிங்க விரும்பினார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பாக முறையான விசாரணையை ஆரம்பிக்குமாறு பதில் பொலிஸ் மாஅதிபர் மற்றும் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்திற்கு பணிப்புரை விடுத்துள்ளோம்.

கோமாவில் இருந்தவர்கள் தற்போதே விழித்துள்ளனர்.

அதனை நசுக்குவதற்கும், சுருக்குவதற்கும்.

இந்த நபரின் தலையீடு உண்மையான குற்றவாளிகளை கண்டுபிடிப்பது அல்ல.

எனவே, நாங்கள் அவர்களுக்கு அடிபணிய மாட்டோம், அதில் சிக்கிக்கொள்ளவும் மாட்டோம்.

நியாயமான விசாரணை நடத்தி உண்மையை வெளிப்படுத்துவோம்-என்றார். (அ)

# நாட்டு மக்களுக்கு தலைமைதாங்க ஆயத்தமாக இருக்கிறாராம் ரணில்!

கொழும்பு, ஒக். 22

நாட்டு மக்களுக்கு தலைமை தாங்க முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஆயத்தமாக இருக்கின்றார் என ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளர் வஜிர அபேவர்தன தெரிவித்தார்.

காலி உலுவிக்கே பிரதேசத்தில் நடைபெற்ற பிரசாரக் கூட்டமொன்றில் அவர் இதனை குறிப்பிட்டார்.

பாராளுமன்றின் ஆசன எண்ணிக்கைகள் பற்றி கருத்திற்கொள்ளத் தேவையில்லை எனவும் அவர் தெரிவித்தார்.

தலைமைத்துவமே முக்கியமானது எனவும்,ரணில் விக்ரமசிங்க தொடர்ந்தும் தமது குழுவுக்கு தலைமை தாங்குவதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

மேலும், நாட்டின் அனைத்து மக்களுக்கும் தலைமை தாங்கவும் மக்களுக்காக செயற்படவும் ரணில் விக்கிரமசிங்க ஆயத்தமாக உள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். (அ)

# துணிச்சலான-வலுவான எதிர்க்கட்சியை கட்டியெழுப்ப எங்களால் மட்டுமே முடியும்

## கூறுகிறார் திலித் ஜயவீர

கொழும்பு, ஒக். 22

சர்வஜன அதிகாரத்தால் மட்டுமே துணிச்சலான வலுவான எதிர்க்கட்சியை கட்டியெழுப்ப முடியும் என அதன் தலைவரும் கம்பஹா மாவட்ட வேட்பாளருமான திலித் ஜயவீர தெரிவித்துள்ளார்.

குருநாகலில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

சர்வஜன அதிகாரத்தை நாங்கள் தொலைநோக்கு பார்வையுடன் கட்டமைத்துள்ளோம்.

எங்களிடம் இருந்து மறைந்து வரும் நமது தேசபக்தியைக் காப்பாற்ற விரும்புகிறோம்.

நாங்கள் ஒரு மூலோபாய அரசியல் பயணத்தை மேற்கொள்கிறோம்.

இந்த அரசியல் பயணத்தை நாங்கள் தைரியமாக எதிர்கொள்கிறோம்.

இந்தத் தேர்தலில் நாங்கள் பிரதமராகப் போட்டியிடவில்லை.

துணிச்சலான எதிர்க்கட்சியாகப் போட்டியிடுகிறோம்.

சரி என்றால் சரி, தவறு என்றால் தவறு.

தவறு எனில் வேலையை நிறுத்தும் அளவுக்கு துணிச்சலான எதிர்க்கட்சிகளை உருவாக்குவோம்.

தற்போதைய எதிர்க்கட்சித் தலைவரை மீண்டும் அங்கு அமர வைப்பதால் மக்களுக்கு என்ன மகிழ்ச்சி ஏற்படப் போகிறது?

எரிவாயு சிலிண்டர் என்பது ரவி கருணாநாயக்கவின் கட்சி.

அவரை தேசிய பட்டியலில் எம்.பியாக்கவே அவர்கள் அனைவரும் நாடு முழுவதும் தேர்தல் பிரசாரத்துக்காக ஓடுகிறார்கள்.

எங்களின் பதக்கம் மக்களின் கழுத்தில் தொங்கும் தேசத்தின் நம்பிக்கை பதக்கம்-என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆபாச வீடியோவை வைத்து மிரட்டி கப்பம் கோரிய இளைஞன் கைது!

ஏறாவூர், ஒக். 22

**ஒய்வு பெற்ற அதிபருடன் ஓரினச்சேர்க்கையில் ஈடுபட்டு அதனை வீடியோ எடுத்து தொடர்ந்து கப்பம் கோரி வசூல் வேட்டையில் ஈடுபட்டு வந்த 21 வயது இளைஞன் கைது செய்யப்பட்டார்.**

மட்டக்களப்பு, ஏறாவூரில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது. ஓய்வு பெற்ற அதிபரை அச்சுறுத்தி கப்பமாக 25 ஆயிரம் ரூபாய் பெற்றபோது 21 வயது இளைஞன் ஒருவரை சனிக்கிழமை கைது செய்ததாக பொலிஸார் கூறினர்.

ஏறாவூர் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பாடசாலை ஒன்றில் 2014ஆம் ஆண்டு அதிபராக கடமையாற்றி வந்தபோது வேறு ஒரு பாடசாலையில் கல்வி கற்று வந்த சிறுவன் அங்கு சிறுமி ஒருவருடன் ஏற்பட்ட தகாத முறையால் அவரை கைது செய்து பின்னர் அங்கிருந்து குறித்த அதிபரின் பாடசாலைக்கு இடமாற்றப்பட்டு அனுமதிக்கப்பட்டான்.

இந்த நிலையில் குறித்த சிறுவனுடன் அதிபர் ஓரினச் சேர்க்கையில் ஈடுபட்டு வந்த நிலையில் அதிபர் கடந்த 3 வருடங்களுக்கு முன்னர் ஓய்வு பெற்றதுடன் சிறுவனும் பாடசாலை கல்வியை முடித்து வெளியேறினான். இருப்பினும் இருவரும் தொடர்ந்து ஓரினச்சேர்க்கையில் ஈடுபட்டு வந்தபோது அதனை குறித்த இளைஞன் வீடியோ எடுத்துள்ளான்.

இவ்வாறான நிலையில் குறித்த இளைஞன் ஓய்வு பெற்ற அதிபரிடம் வீடியோவை வெளியிடுவேன் என மிரட்டி 9 இலட்சம் ரூபாய் பணம் தருமாறு கோரிய நிலையில் இளைஞனிடம் பணம் வழங்கியதற்கான கடிதம் ஒன்றை வாங்கி கொண்டு அந்தப் பணத்தை அதிபர் கொடுத்துள்ளார்.

இதன் பின்னர் குறித்த இளைஞன் ஓய்வு பெற்ற 63 வயதுடைய அதிபரிடம் மீண்டும் தனக்கு 5 இலட்சம் ரூபாய் பணம் தருமாறும் அல்லது வீடியோவை வெளியிடப் போவதாக அச்சுறுத்திய நிலையில் 25 ஆயிரம் ரூபாய் மட்டும் தருவேன் என தெரிவித்துவிட்டு இது தொடர்பில் பொலிஸாரிடம் முறைப்பாடு செய்துள்ளார். இந்த நிலையில் பொலிஸாரின் ஆலோசனைக்கமைய குறித்த இளைஞனை வெளியிடம் ஒன்றுக்கு அதிபர் வரவழைத்து பணத்தை வழங்கும் போது அங்கு மாறவேடத்தில் இருந்த பொலிஸார் அந்த இளைஞனை மடக்கிப் பிடித்து கைது செய்தனர்.

இதனையடுத்து கைது செய்யப்பட்ட இளைஞனை நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை மேற்கொண்டு வருவதாக பொலிஸார் தெரிவித்தனர். (எ)




# கிரிக்கெட் சுற்றுப்போட்டி

கல்முனை, ஒக். 22

என். பி. எல். கிரிக்கெட் சுற்றுப்போட்டி எதிர்வரும் 25, 26, 27 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளன.

கல்முனை ஸாஹிரா கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட ஊடகவியலாளர் சந்திப்பு ஞாயிற்றுக்கிழமை மாலை கல்லூரியின் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. இதன்போதே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டது.

இதனடிப்படையில் என். பி. எல். கிரிக்கெட் சுற்றுப்போட்டி எதிர்வரும் 25, 26, 27 ஆம் திகதிகளில் பகல், இரவு போட்டிகளாக நடைபெறவுள்ளன. இந்தச் சுற்றுப்போட்டியில் 32 அணிகள் பங்குபற்றுகின்றன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, பாடசாலைக்கான பேருந்து கொள்வனவுக்கு நிதியம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதோடு முடியுமானவர்கள் தனியாகவோ, குழுக்களாகவோ நிதியுதவி வழங்க முடியும் என்று அதிபர் ஜாபீர் தெரிவித்தார்.

பாடசாலை பேருந்து கொள்வனவுக்காக இந்தப் பாடசாலையின் 1990 ஆம் ஆண்டு பிரிவினர் 5 இலட்சம் ரூபாய் நிதியை கையளித்தனர். (எ)

# மழைச்சாரல் தொடர்கிறது கவிதை நூல் வெளியீடு



தோப்பூர், ஒக். 22

தோப்பூர் ஷாக்கிர் கிலுறுதீன் எழுதிய "மழைச்சாரல் தொடர்கிறது" என்ற கவிதை நூல் வெளியீட்டு விழா பாத்திமா முஸ்லிம் மகளிர் கல்லூரியில் தோப்பூர் கலை இலக்கிய பேரவையின் அனுசரணையில் விமர்சையாக நடைபெற்றது.

இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட விரிவுரையாளரும், முன்னாள் பீடாதிபதியுமான எம். எல். பெளசுல் அமீர் தலைமையில் நடைபெற்ற இந்த நூல் வெளியீட்டு நிகழ்வில் பிரதம விருந்தினராக ஒய்வுநிலை உதவிக் கல்விப் பணிப்பாளர் பீ. ஹாஜா முகைதீன் கலந்து கொண்டு முதல் பிரதியை பிரபல தொழிலதிபரும், அல் - மஸ்ஜிதுல் பலாஹ் ஜும்ஆ பள்ளிவாசலின் தலைவருமான எஸ். எச். ஜெஸாஹீருக்கு வழங்கி வைத்தார்.



இந்த நிகழ்வில் பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், புத்திஜீவிகள், உலமாக்கள், கலை இலக்கியப் பேரவை உறுப்பினர்கள், சமூக செயல்பாட்டாளர்கள், இலக்கியவாதிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (எ)

# மருதமுனை நூலகத்துக்கு புத்தகங்கள் அன்பளிப்பு

மருதமுனை, ஒக். 22

தேசிய வாசிப்பு மாதத்தை சிறப்பிக்கும் வகையில் மருதமுனை மருத்தூர்க்கனி ஞாபகார்த்த பொது நூலகத்துக்கு ஓய்வுபெற்ற அதிபர் ஏ. ஆர். அப்துல் ரசூல் ஒரு தொகுதி நூல்களை அன்பளிப்பு செய்துள்ளார்.

இவற்றை அவர் நேற்றுத் திங்கட்கிழமை நூலகர் ஹரீஸா சமீமிடம் கையளித்தார்.

நூலக வளர்ச்சிக்கு இவ்வாறான சமூக ஆர்வலர்கள் மற்றும் நலன் விரும்பிகள் ஒத்துழைப்பு வழங்கி வருவதையிட்டு மகிழ்ச்சியும் நன்றியும் தெரிவிப்பதாக நூலகர் ஹரீஸா குறிப்பிட்டார்.



இந்த நிகழ்வில் நூலக உதவியாளர்கள் மற்றும் பணியாளர்களும் கலந்து கொண்டனர்.

இதேவேளை, ஒக்ரோபர் - தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு கல்முனை, மருதமுனை, நற்பிட்டிமுனை மற்றும் சாய்ந்தமருது பொது நூலகங்களால் பல்வேறு சிறப்பு நிகழ்வுகள் ஒழுங்கு செய்யப்பட்டு நடத்தப்பட்டு வருகின்றன. (எ)

# திகிலிவெட்டை கிராம மக்களுக்கு இணைந்த கரங்களால் உலருணவு

மட்டக்களப்பு, ஒக். 22

மட்டக்களப்பு மாவட்டத்தில் அடிப்படை வசதிகள் இன்றி வாழும் திகிலிவெட்டை கிராம மக்களுக்கு இணைந்த கரங்கள் உறவுகளால் உலர் உணவுப் பொதிகள் வழங்கி வைக்கப்பட்டன.

கிரான் பிரதேச செயலக பிரிவில் திகிலிவெட்டை கிராமத்தில் வசிக்கும் வறுமைக்கோட்டுக்கு உட்பட்ட குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொருட்கள் இணைந்த கரங்கள் அமைப்பின் சிரேஷ்ர உறுப்பினரால் வழங்கி வைக்கப்பட்டன.




குடி நீர், மின்சார வசதி மற்றும் தொழில் வாய்ப்பு இன்றி யானைகளின் அச்சுறுத்தல்களுக்கு மத்தியில் இந்த கிராமத்தில் வாழ்ந்து வரும் குடும்பங்களுக்காக இணைந்த கரங்கள் உறவுகளின் நிதிப் பங்களிப்பில் உலர் உணவுப் பொதிகள் வழங்கப்பட்டன. (எ)

# ஐஸ் போதைப்பொருளுடன் 25 வயது இளைஞன் கைது!

திருகோணமலை, ஒக். 22

திருகோணமலையில் ஐஸ் போதைப்பொருளுடன் வவுனியாவைச் சேர்ந்த இளைஞன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

திருகோணமலை நொச்சியாகம பகுதியில் ஐஸ் போதைப் பொருளுடன் சந்தேக நபரொருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக கடற்படை தலைமையகம் தெரிவித்துள்ளது.

கடற்படையினரும், திருகோணமலை பொலிஸ் போதைப் பொருள் தடுப்புப் பிரிவினரும் இணைந்து நேற்று முன்தினம் முன்னெடுத்த சுற்றிவளைப்பின் போதே இந்தக் கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

சந்தேகத்துக்கு இடமான முறையில் பயணித்த மோட்டார் சைக்கிளை சோதனைக்கு உட்படுத்திய போதே 15 கிராம் 310 மில்லி கிராம் ஐஸ் போதைப் பொருளுடன் சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர் 25 வயதுடைய வவுனியாவைச் சேர்ந்தவர் எனத் தெரியவந்துள்ளது. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "கண்ணாடிகளின் வீடு" இரகசிய சிறை அம்பலம்

## ஷேக் ஹசீனாவுக்கு பெரும் சிக்கல்

டாக்கா, ஒக். 22

**அரசுக்கு எதிரானவர்களை கைது செய்து சித்திரவதை செய்ய பயன்படுத்திய "கண்ணாடிகளின் வீடு" ஷேக் ஹசீனாவின் இரகசிய சிறை தொடர்பான அதிர்ச்சித் தகவல்கள் வெளியாகியுள்ளன.**



பங்களாதேஷில் பிரதமர் ஷேக் ஹசீனா தலைமையிலான அவாமி லீக் அரசு ஆட்சி செய்து வந்த நிலையில், அரசு வேலைகளில் 30 சதவீதம் இடஒதுக்கீடு வழங்கும் விவகாரம் சில மாதங்களுக்கு முன் வன்முறையாக வெடித்தது. இந்த போராட்டத்தில் ஏற்பட்ட கலவரத்தில் 500இற்கும் மேற்பட்டோர் பலியானர்.

இதனால், நாட்டில் பதற்ற நிலை ஏற்பட்டது.

ஷேக் ஹசீனா பிரதமர் பதவியை இராஜிநாமா செய்து விட்டு நாட்டை விட்டு வெளியேறினார். தலைநகர் டாக்காவிலிருந்து, சகோதரியுடன் இராணுவ விமானத்தில் வெளியேறி இந்தியாவில் தஞ்சமடைந்துள்ளார்.

ஹசீனாவின் ஆட்சிக் காலத்தில் பலர் காணாமல் ஆக்கப்பட்டனர். ஹசீனாவுக்கு எதிரான நிலைப்பாட்டை கொண்டவர்கள் கைது செய்யப்பட்டு, இரகசிய சிறையில் அடைக்கப்பட்டனர். அவர்கள் சிறைகளில் இருந்தபோது, சந்தித்த அனுபவங்களை வெளிப்படுத்தியுள்ளனர். அதில், இரகசிய சிறை பற்றிய சில அதிர்ச்சிகர தகவல்கள் வெளிவந்துள்ளன.

இந்த சிறைகளை அயினா கோர் என அழைக்கின்றனர். கண்ணாடிகளின் வீடு என அதற்குப் பொருள். 2009இல் ஹசீனாவின் ஆட்சி தொடங்கிய பின்பு, நூற்றுக்கணக்கானோரை பாதுகாப்புப் படையினரால் பிடித்து செல்லப்பட்டனர். சில சமயங்களில் அரசுக்கு எதிராக சிறியளவில் போராட்டம் நடத்தியவர்களும் கூட சிக்கினர்.

அவர்களில் பலர் கொல்லப்பட்டு விட்டனர் என்றும் அவர்களின் உடல்கள் துண்டுகளாக்கப்பட்டு விட்டன என்றும் செய்திகள் தெரிவிக்கின்றன. ஒரு சிலர் இரகசிய இராணுவத் தடுப்பு காவல் மையத்தில் வைக்கப்பட்டனர். அதுவே அயினா கோர் என அழைக்கப்பட்டது என தி நியூயோர்க் ரைம்ஸ் வெளியிட்டுள்ள செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஹசீனா, அரசுக்கு சவாலாக இருக்கும் அனைவரையும் கட்டுப்படுத்தி அரசை ஒழுங்குப்படுத்தி வைத்திருந்திருக்கிறார் என நம்பப்படுகிறது. இந்த முயற்சியின் ஒரு பகுதியாகவே இந்த இரகசிய சிறை செயல்பட்டு வந்தது என அந்தச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதன்படி, 700 பேர் காணாமல் போனவர்களில் அடங்குவார்கள் என மனித உரிமை அமைப்புகள் மதிப்பீடு செய்துள்ளன. இந்த எண்ணிக்கை உண்மையில் அதிகரிக்கக் கூடும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

சிறை பிடித்து வைக்கப்பட்டவர்களில், சிலர், தங்களுடைய இடத்துக்கு மேலே காலையில் இராணுவ அணிவகுப்பு நடப்பதற்கான சத்தம் கேட்டது எனக் கூறுகின்றனர். சிறையில் உள்ளவர்களால், அவர்களைத் தவிர வேறு நபர்களை ஒருபோதும் பார்க்க முடியாது. அதுவும் கண்ணாடிகளின் வீடு என பெயர் வருவதற்கு ஏதுவாகி விட்டது. விசாரணையின்போது, உடல்ரீதியாக நேரடியான சித்திரவதைகளை கைதிகள் சந்தித்தனர்.

சிறைக்குள் ஜன்னல்கள் இல்லை. வெளியுலகில் இருந்து எந்தவித செய்தியும் உள்ளே செல்லாது. இதற்காக சிறை அதிகாரிகளுக்கு கடுமையான உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தது.

இந்த சிறைகளின் அறைகள் ஒன்றுக்கு ஒன்று எதிராக இருக்கும். சிறை அறைகளில் பெரிய மின்விசிறிகள் ஓடியபடி இருக்கும். அது காவலர்களின் உரையாடல்கள் கைதிகளுக்கு கேட்கக் கூடாது என்பதற்காகவும், கைதிகளின் மனநிலை பாதிப்படைய செய்வதற்காகவும் இது போன்ற விடயங்கள் மேற்கொள்ளப்பட்டு உள்ளன என தி நியூயோர்க் ரைம்ஸ் செய்தி வெளியிட்டுள்ளது. (எ)

# நிஜ்ஜார் படுகொலையில் எனக்கு தொடர்பில்லை!

## முன்னாள் இந்திய தூதுவர் சஞ்சய் வர்மா

ஒட்டாவா, ஒக். 22

"ஹர்தீப் சிங் நிஜ்ஜார் படுகொலை விவகாரத்தில் கனடாவால் எந்தவொரு ஆதாரமும் இந்தியாவிடம் பகிரப்படவில்லை. இந்த விவகாரம் முழுவதும் அரசியல் உள்நோக்கம் கொண்டது"- இவ்வாறு கனடாவுக்கான முன்னாள் இந்தியத் தூதுவர் சஞ்சய் வர்மா தெரிவித்தார்.

காலிஸ்தான் பிரிவினைவாதி என்று இந்தியாவால் அறிவிக்கப்பட்ட நிஜ்ஜார் படுகொலை விவகாரத்தில் கனடா மற்றும் இந்தியாவுக்கு இடையே மோதல் முற்றியது. இதன் தொடர்ச்சியாக, பாதுகாப்பை முன்னிட்டு கனடாவுக்கான இந்தியத் தூதுவர் சஞ்சய் வர்மா உட்பட 6 பேரை திரும்பப் பெறுகிறோமென இந்தியா அறிவித்தது. இந்த சூழலில், தூதுவர்கள் 6 பேரையும் கனடா வெளியேற்றியது.

இதற்கு இந்தியாவும் பதிலடி கொடுத்துள்ளது. இதன்படி, ஸ்டுவர்ட் ரோஸ் வீலர், பேட்ரிக் ஹெபர்ட், மேரி கேத்தரின் ஜாலி, இயான் ராஸ் டேவிட் டிரைட்ஸ், ஆடம் ஜேம்ஸ் சுப்கா, பவுலா ஆர்ஜூவலா உள்ளிட்ட 6 பேரையும் வெளியேறும்படி மத்திய வெளிவிவகார அமைச்சு அறிவித்தது. இதனால் கனடா மற்றும் இந்தியா இடையே தூதரக அளவில் மோதல் போக்கு தீவிரமடைந்துள்ளது.

இந்த நிலையில், "கனடா நாட்டை சேர்ந்த சி. டி. வி. நியூஸ் என்ற செய்தி ஊடகத்துக்கு நேர்காணல் வழங்கிய கனடாவுக்கான முன்னாள் இந்தியத் தூதுவர் சஞ்சய் வர்மா, இந்த விவகாரத்தில் எந்தவொரு ஆதாரமும் கனடாவால் இந்தியாவிடம் பகிரப்படவில்லை. இந்த விவகாரம் முழுவதும் அரசியல் உள்நோக்கம் கொண்டது.

கனடாவின் வெளிவிவகார அமைச்சர் மெலனி ஜாய் கூறும் விடயங்களில் உறுதியான சான்று என்னவென்று நான் பார்க்க விரும்புகின்றேன். என்னைப் பற்றி கூறும்போது, அரசியல் உள்நோக்கோடு அவர் பேசுகிறார்.

நிஜ்ஜார் உட்பட காலிஸ்தானிய பிரிவினைவாதிகள் பற்றிய தகவல்களை சேகரிக்கும்படி நான், தனிநபர்களுக்கு உத்தரவிடவோ அல்லது அவர்களை கட்டாயப்படுத்தவோ இல்லை. இந்தியாவின் ஒரு தூதுவராக இதுபோன்ற செயல்களை நான் செய்யவில்லை.

எந்தவொரு படுகொலையும் தவறானது. மோசமானது. இதனை நானும் கண்டிக்கிறேன். அது உலகின் எந்தப் பகுதியிலும் நடக்கக் கூடாது" என்றார். (எ)

# இருளில் மூழ்கியது கியூபா

ஹவானா, ஒக். 22

கியூபாவின் மிகப்பெரிய மின் உற்பத்தி நிலையமான லா அன்ரனி குட்டோரஸ் சேதமடைந்ததையடுத்து, நாடு முழுதும் மின்சாரம் தடைப்பட்டது.

கரிபீயன் கடலிலுள்ள தீவு நாடு கியூபா. ஒரு கோடிக்கும் அதிகமான மக்கள் தொகையை கொண்ட இந்த நாட்டில் கடந்த சில நாட்களாக மின்சார விநியோகம் தடைப்பட்டுள்ளது. பொருளாதார சரிவு உட்பட பல்வேறு காரணங்களால், மின் உற்பத்தி உள்ளிட்ட அனைத்துப் பணிகளும் பாதிக்கப்பட்டுள்ளன. இதனால், கடுமையான மின் தட்டுப்பாடு அங்கு நிலவுகிறது.

இந்த நிலையில், நாட்டின் மிகப்பெரிய மின் உற்பத்தி நிலையம் தன் உற்பத்தியை நிறுத்தியது. அண்மையில் வீசிய மில்டன் சூறாவளி காரணமாக இந்த மின் உற்பத்தி நிலையம் சேதமடைந்ததாக கூறப்படுகிறது. இதனால், மின்சார உற்பத்தியை தொடர முடியாமல் மூடப்பட்டது.

மின்சார உற்பத்தி தடைப்பட்டதால் கியூபா இருளில் மூழ்கியது. போக்குவரத்து சேவையும் பாதிக்கப்பட்டது. கடைகள், வணிக நிறுவனங்கள், ஹோட்டல்கள் உள்ளிட்டவை செயலிழந்தன. முக்கிய வீதிகள் வெறிச்சோடின. (எ)

# ஐ. நா. பாதுகாப்பு சபையில் நிரந்தர உறுப்பினராக இந்தியா

## ரஷ்ய வெளிவிவகார அமைச்சர் வலியுறுத்தல்

மொஸ்கோ, ஒக். 22

ஐ. நா. பாதுகாப்புச் சபையில் இந்தியா நிரந்தர உறுப்பினராக இருக்க வேண்டும் என்று ரஷ்ய வெளிவிவகார அமைச்சர் செர்ஜி லாவ்ரவ் வலியுறுத்தியுள்ளார்.



இந்தியா, பிரேசில் போன்ற நாடுகள் மற்றும் ஆபிரிக்க பிரதிநிதிகளை ஐ. நா. பாதுகாப்புச் சபையில் நிரந்தர அடிப்படையில் நீண்ட காலத்துக்கு உறுப்பினர்களாக இருக்க செய்ய வேண்டும். உலகளவில் பெரும்பான்மையாக உள்ளவர்களின் பிரதிநிதித்துவம் உறுதி செய்யப்பட வேண்டியது அவசியம். இதனால், இந்தியாவுக்கான தனது ஆதரவை அவர் வெளிப்படுத்தியுள்ளார்.

இதேவேளை, ஐ. நா. பாதுகாப்புச் சபையில் இந்தியா நிரந்தர உறுப்பினராக வேண்டுமென அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் மற்றும் பிரான்ஸ் ஜனாதிபதி மக்ரோன் ஆகியோர் ஏற்கனவே ஆதரவு தெரிவித்துள்ள நிலையில், கடந்த மாதம் பிரிட்டன் பிரதமர் கெய்ர் ஸ்ரார்மரும் இந்தியாவுக்கான ஆதரவு நிலைப்பாட்டை வெளிப்படுத்தினார். (எ)

# ஹர்தீப் சிங் நிஜ்ஜார் வெளிநாட்டு தீவிரவாதி

புதுடில்லி, ஒக். 22

"கனடாவில் சுட்டுக் கொல்லப்பட்ட ஹர்தீப் சிங் நிஜ்ஜார், வெளிநாட்டு தீவிரவாதி. போலி ஆவணங்கள் மூலம் அவர் எப்படியோ கனடா குடியுரிமை பெற்றுள்ளார்" என்று எதிர்க்கட்சித் தலைவர் மெக்சிம் பெர்னியர் குற்றஞ்சாட்டியுள்ளார்.

கனடாவில் சுட்டுக்கொல்லப்பட்ட ஹர்தீப் சிங் நிஜ்ஜார், கனடா குடியுரிமை பெற்றவர். அவர் கனடா பிரஜை என்று கூறப்படும் கட்டுக் கதைகளை பகிரங்கப்படுத்த வேண்டிய நேரம் இது. ஏனெனில் காலிஸ்தான் தீவிரவாதிதான் நிஜ்ஜார். அவர் ஒரு வெளிநாட்டு தீவிரவாதி. கடந்த 1997ஆம் ஆண்டு முதல் கனடாவில் தஞ்சமடைய கேட்டு பல முறை நிஜ்ஜார் முயற்சித்துள்ளார். எனினும், அவருக்கு கனடா குடியுரிமை மறுக்கப்பட்டு வந்துள்ளது. ஆனாலும், எப்படியோ போலி ஆவணங்கள் மூலம் கடந்த 2007ஆம் ஆண்டு கனடா குடியுரிமை பெற்றுள்ளார். இது கனடா அரச நிர்வாகத்தின் தவறு"- என்று மெக்சிம் பெர்னியர் குறிப்பிட்டுள்ளார். (எ)

# வங்கக் கடலில் உருவானது காற்றமுத்தத் தாழ்வு பகுதி

சென்னை, ஒக். 22

மத்திய கிழக்கு வங்கக்கடல் பகுதியில் குறைந்த காற்றழுத்த தாழ்வுப் பகுதி உருவாகியுள்ளது.

தமிழ்நாட்டில் கடந்த 15ஆம் திகதி முதல் வடகிழக்கு பருவ மழை பெய்யத் தொடங்கியது. இதன்படி, சென்னை உள்ளிட்ட வட மாவட்டங்களில் மிக கன மழை பெய்தது.

அந்த நேரத்தில் வங்கக்கடலில் ஒரு காற்றழுத்த தாழ்வு மண்டலமும், வட மாவட்டங்களில் மேலடுக்கு சுழற்சியும் நிலவியதால் இந்த மழை கிடைத்தது.

மேலும் தாழ்வு மண்டலம் சென்னைக்கு அருகே வரும் போது மேலும் மழை இருக்கும் என அறிவிக்கப்பட்ட நிலையில், அது பொய்த்து போனது.

இந்த நிலையில் மத்திய கிழக்கு வங்கக்கடல் மற்றும் அதனையொட்டிய வடக்கு அந்தமான் கடல் பகுதியில் புதிய காற்றழுத்த தாழ்வு பகுதி உருவாகியுள்ளதாக வானிலை ஆய்வு மையம் அறிவித்துள்ளது.

இது மேற்கு - வடமேற்கு திசையில் நகர்ந்து இன்று செவ்வாய்க்கிழமை தாழ்வு மண்டலமாகவும், நாளை புதன்கிழமை புயலாகவும் கிழக்கு மத்திய வங்கக்கடல் பகுதியில் வலுவடையவுள்ளது எனவும் ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இந்தப் புயலுக்கு "டானா" என்று பெயரிடப்பட்டுள்ளது. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகளிர் ரி - 20 உலக கிண்ணம் நியூசிலாந்து அணி வசமானது


டுபாய், ஒக். 22

மகளிர் ரி - 20 உலகக் கிண்ணம் நியூசிலாந்து அணி வசமானது. டுபாயில் நேற்று முன்தினம் நடைபெற்ற இறுதிப் போட்டியில் தென்னாபிரிக்க அணியை 32 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வீழ்த்தி நியூசிலாந்து அணி சம்பியனானது.

இரு அணிகளும் முதல் முறையாக உலகக் கிண்ணத்தை வெல்லும் முனைப்புடன் களம் கண்டன. இதில் நாணயச்சுழற்சியில் வென்ற தென்னாபிரிக்க அணி பந்து வீச முடிவு செய்தது. இதன்படி, நியூசிலாந்து அணி முதலில் துடுப்பெடுத்தாடியது.அந்த அணி 20 ஓவர்களில் 5 விக்கெட்கள் இழப்புக்கு 158 ஓட்டங்கள் சேர்த்தது.

நியூசிலாந்து அணிக்காக சுசி பேட்ஸ் 32 ஓட்டங்கள், அமெலியா கெர் 43 ஓட்டங்கள், ப்ரூக் ஹாலிடே 38 ஓட்டங்கள் எடுத்தனர். 159 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்கை தென்னாபிரிக்கா விரட்டியது. முதல் விக்கெட்டுக்கு 51 ஓட்டங்கள் இணைப்பாட்டம் அமைத்தது தென்னாபிரிக்கா.

அதன் பின்னர் சீரான இடைவெளியில் விக்கெட்களை இழந்தது அந்த அணி. மொத்தமாக 77 ஓட்டங்கள் எடுத்த போது 5 விக்கெட்களை இழந்திருந்தது தென்னாபிரிக்கா. இந்த நிலையில், 26 ஓட்டங்கள் எடுப்பதற்குள் 5 விக்கெட்களை இழந்தது. அணித் தலைவி லாரா வோல்வார்ட் மட்டுமே 33 ஓட்டங்கள் எடுத்தார். மற்ற அனைவரும் சொற்ப ஓட்டங்களில் ஆட்டமிழந்தனர்.




20 ஓவர்களில் 9 விக்கெட்கள் இழப்புக்கு 126 ஓட்டங்களை அந்த அணி எடுத்தது. இதன் மூலம் நியூசிலாந்து வெற்றி பெற்றது. அந்த அணி சார்பில் அமெலியா கெர் மற்றும் ரோஸ்மேரி தலா 3 விக்கெட்களை வீழ்த்தினர்.

உலகக் கிண்ணத் தொடருக்கு முன்னதாக நியூசிலாந்து அணி விளையாடிய 17 ரி - 20 கிரிக்கெட் போட்டிகளில் இரண்டில் மட்டுமே வெற்றியைப் பெற்றிருந்தது. இந்த நிலையில் இந்தத் தொடரில் சிறப்பாக செயல்பட்டு சம்பியன் பட்டம் வென்றுள்ளது. ஐக்கிய அரபு அமீரக ஆடுகளங்களுக்கு ஏற்ப கள வியூகம் அமைத்து அந்த அணி செயல்பட்டது வெற்றிக்கு வழிவகுத்தது. (எ)




## அமெலியா கெர் சாதனை

டுபாய், ஒக். 22

நியூசிலாந்து அணியின் சுழற்பந்து வீச்சாளர் அமெலியா கெர் 6 போட்டிகளில் விளையாடி 15 விக்கெட்கள் வீழ்த்தினர். இதன் மூலம் மகளிர் உலகக் கிண்ணத் தொடர் ஒன்றில் அதிக விக்கெட்கள் வீழ்த்தியவர் என்ற சாதனையை அவர் படைத்தார். இதற்கு முன்பு இங்கிலாந்தின் அன்யா ஸ்ருப்சோல் 2014ஆம் ஆண்டிலும், அவுஸ்திரேலியாவின் மேகன் ஸ்கட் 2020ஆம் ஆண்டிலும் தலா 13 விக்கெட்கள் எடுத்ததே அதிகபட்சமாக இருந்தது. (எ)




## 5 விக்கெட் வித்தியாசத்தில் இலங்கை அசத்தல் வெற்றி

கொழும்பு, ஒக். 22

மேற்கு இந்திய தீவுகள் அணிக்கு எதிரான முதல் ஒரு நாள் கிரிக்கெட் போட்டியில் இலங்கை அணி 31. 5 ஓவரில் 5 விக்கெட்கள் இழப்புக்கு 234 ஓட்டங்கள் எடுத்து வெற்றி பெற்றது.

இலங்கையில் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள மேற்கு இந்திய தீவுகள் கிரிக்கெட் அணி 3 ரி - 20 மற்றும் 3 ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடி வருகிறது. இதில் ரி - 20 தொடரை 2 - 1 என்ற கணக்கில் இலங்கை கைப்பற்றியது. இந்த நிலையில், இரு அணிகளுக்கும் இடையிலான முதலாவது ஒருநாள் போட்டி நேற்று முன்தினம் நடைபெற்றது.

இதில் நாணயச்சுழற்சியில் வென்ற மேற்கு இந்திய தீவுகள் அணி முதலில் துடுப்பெடுத்தாடியது. இதன்படி, அந்த அணி 38. 3 ஓவரில் 4 விக்கெட்கள் இழப்புக்கு 185 ஓட்டங்கள் எடுத்திருந்தபோது மழை பெய்தது. இதனால் ஆட்டம் இடைநிறுத்தப்பட்டது. ரூதர்போர்ட் பொறுப்புடன் விளையாடி அரைச் சதம் கடந்து 74 ஓட்டங்களுடனும் ரோஸ்டன் சேஸ் 33 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் களத்தில் இருந்தனர்.

இதையடுத்து, மழை காரணமாக டி. எல். எஸ். முறைப்படி 37 ஓவரில் 232 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்று இலங்கை அணிக்கு இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. தொடக்க துடுப்பாட்ட வீரராக களமிறங்கிய நிஷான் மதுஷ்க அதிரடியாக விளையாடி அரைச் சதம் கடந்து 69 ஓட்டங்கள் சேர்த்து ஆட்டமிழந்தார். அணித் தலைவர் சரித் அசலங்க சிறப்பாக விளையாடி 77 ஓட்டங்கள் எடுத்து வெளியேறினார்.

இறுதியில், இலங்கை அணி 31. 5 ஓவரில் 5 விக்கெட்கள் இழப்புக்கு 234 ஓட்டங்கள் எடுத்து அபார வெற்றி பெற்றது. இதன்மூலம் ஒருநாள் தொடரில் இலங்கை 1 - 0 என முன்னிலை பெற்றது. (எ)

## நிங்போ ஓபன் ரென்னிஸ் சம்பியனானார் கசட்கினா

பீஜிங், ஒக். 22

நிங்போ ஓபன் ரென்னிஸ் தொடரில் கசட்கினா சம்பியன் பட்டம் வென்றார்.

இந்தத் தொடர் சீனாவில் நடைபெற்றது. இதில் மகளிர் ஒற்றையர் பிரிவில் நேற்று முன்தினம் நடைபெற்ற இறுதிப்போட்டியில் ரஷ்ய வீராங்கனை டாரியா கசட்கினா, சக நாட்டு வீராங்கனையான மிர்ரா அண்ட்ரீவா வுடன் மோதினார்.

இதில் கசட்கினா முதல் செட்டை 6 - 0 என கைப்பற்றினார். 2ஆவது செட்டை அண்ட்ரீவா 6 - 4 எனக் கைப்பற்றினார். இதையடுத்து, வெற்றியாளரை நிர்ணயிக்கும் மூன்றாவது செட்டை 6 - 4 என கசட்கினா கைப்பற்றினார். இதையடுத்து 6 - 0, 4 - 6, 6 - 4 என்ற செட் கணக்கில் அண்ட்ரீவாவை வீழ்த்தி கசட்கினா சம்பியனார்.(எ)





## முதல் டெஸ்ட் போட்டியில் பங்களாதேஷ் தடுமாற்றம்

### தெறிக்கும் தென்னாபிரிக்கா

டாக்கா, ஒக். 22

தென்னாபிரிக்காவுக்கு எதிரான முதல் டெஸ்ட் போட்டியில் பங்களாதேஷ் அணி தடுமாறி வருகிறது. நேற்று ஆரம்பமான இந்தப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடி வரும் பங்களாதேஷ் அணி 100 ஓட்டங்களுக்கு 8 விக்கெட்களை பறிகொடுத்துள்ளது. தென்னாபிரிக்க அணி வீரர்களின் பந்து வீச்சை எதிர்கொள்ள முடியாது பங்களாதேஷ் துடுப்பாட்ட வீரர்கள் தவித்து வருகின்றனர். சொந்த மண்ணில் சொதப்பும் பங்களாதேஷ் அணியினரின் செயல்பாடு அந்த அணி இரசிகர்களை சோகத்தில் ஆழ்த்தியுள்ளது. (எ)

## தாய் நாடு திரும்ப முடியாது தவிக்கும் ஷகிப் அல் ஹசன்

### கிரிக்கெட் வாழ்க்கை முடிகிறது

டாக்கா, ஒக். 21

தென்னாபிரிக்காவுக்கு எதிராக தன் சொந்த மண்ணில் விளையாடி ஓய்வு பெற விரும்புவதாக தெரிவித்த ஷகிப் அல் ஹசன், நாட்டில் நிலவும் எதிர்ப்பு காரணமாக முதல் டெஸ்ட் போட்டியிலிருந்து தன்னை விலக்கிக் கொண்டதையடுத்து ஷகிப் அல் ஹசனின் கிரிக்கெட் வாழ்க்கை முடிவுக்கு வருகிறது என்று பங்களாதேஷ் ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. ஷகிப் அல் ஹசனுக்குப் பதிலாக தென்னாபிரிக்காவுக்கு எதிரான முதல் டெஸ்ட் போட்டிக்கு இடது கை சுழற்பந்து வீச்சாளர் ஹசன் முராத் சேர்க்கப்பட்டுள்ளார். முதல் டெஸ்ட் டாக்காவில் நேற்று தொடங்கியது.

இந்த நிலையில், நியூயோர்க்கில் இருந்து டாக்காவுக்குத் திரும்பும் வழியில் டுபாயில் தங்குமாறு ஷகிப் அல் ஹசன் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளார். பங்களாதேஷில் ஷகிப் அல் ஹசனுக்கு எதிராக போராட்டங்கள்



தொடர்ந்து வருகின்றன. கடந்த ஒகஸ்டில் அவாமி லீக் அரசு பதவி விலகியதிலிருந்தே ஷகிப் அல் ஹசன் நாடு திரும்ப முடியாமல் அவதிப்படுகிறார். அவாமி லீக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் என்பதால் ஷகிப் அல் ஹசனுக்கும் எதிர்ப்பு கடுமையாகவுள்ளது. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உயிர்த்த ஞாயிறு...

குழப்பத்தை ஏற்படுத்த முயல்கின்றது என மல்கம் ரஞ்சித் குறிப்பிட்டார்.

மேலும், முன்னைய அரசாங்கத்தின் இரண்டு அறிக்கைகளில் ஒன்றில் உயிர்த்த ஞாயிறு குறித்த விசாரணை ஆணைக்குழுவின் பரிந்துரைகள் காணப்படுகின்றன.

புதிய அறிக்கைகளில் அரசாங்கத்தின் தற்போதைய அறிக்கைகள் குறித்து தெரிவிக்கப்பட்டுள்ளது,முன்னைய அரசாங்கம் இந்த பரிந்துரைகள் குறித்து அறிவுறுத்தல்களை வழங்கியுள்ளது.

நாங்கள் இந்த இரண்டு அறிக்கைகளையும் ஏற்றுக்கொள்ளவில்லை. தற்போதைய ஜனாதிபதி உயிர்த்த ஞாயிறு தாக்குதல் குறித்து விசாரணைகளை மேற்கொள்வதாக உறுதியளித்துள்ளார், அவர் அதனை நிறைவேற்றுவாரா என கத்தோலிக்க திருச்சபை பார்த்துக் கொண்டிருக்கின்றது-என்றார். (அ)

## பாராளுமன்ற...

இந்த நிலையில் பொதுத் தேர்தலில் வன்முறை சம்பவங்கள் அதிகமாக பதிவாகும் என்பதால் கண்காணிப்பு நடவடிக்கைகளும், பொலிஸ் பாதுகாப்பு அனைத்து தொகுதிகளிலும் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

இம்முறை பெப்ரல் அமைப்பு, 30 வெளிநாட்டவர்கள் உட்பட 5000 கண்காணிப்பாளர்களை கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபடுத்தியுள்ளதாக அமைப்பின் நிறைவேற்று பணிப்பாளர் ரோஹண ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளதுடன், 500 கண்காணிப்பாளர்களை ஈடுபடுத்தியுள்ளதாக தேர்தல் வன்முறைகளைக் கண்காணிப்பதற்கான நிலையத்தின் நிறைவேற்று பணிப்பாளர் மஞ்சுள கஜநாயக்க கூறியுள்ளார். (அ)

## ஈஸ்டர் குண்டுத் தாக்குதல்...

கோரிக்கை விடுத்ததுடன், அதற்காக ஒரு வார கால அவகாசம் வழங்குவதாக தெரிவித்திருந்தார்.

எனினும், அதற்குப் பதிலளித்த அமைச்சரவைப் பேச்சாளரும் அமைச்சருமான விஜித ஹேரத், உதய கம்மன்பிலவிடம் அறிக்கை கள் காணப்படுமாயின், மூன்று நாட்களுக்குள் அவற்றை சமர்ப்பிக்க வேண்டும் என கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்ற ஊடக சந்திப்பில் கோரிக்கை விடுத்திருந்தார்.

அத்துடன், அவ்வாறான அறிக்கைகளை மறைத்து வைத்திருந்தலானது பெரும் குற்றச் செயலாகும் எனவும் குறிப்பிட்டிருந்தார்.

இதன் பின்னணியிலேயே ஊடக சந்திப்பு ஒன்றை நேற்று நடத்திய உதய கம்மன்பில பல்வேறு தகவல்களை இவ்வாறு வெளிப்படுத்தினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

உயிர்த்த ஞாயிறுதின தற்கொலை குண்டுத் தாக்குதல்கள் தொடர்பிலான விசாரணை அறிக்கைகளை வெளியிடுமாறு ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்கவுக்கு நான் ஒரு வார காலம் அவகாசம் கொடுத்திருந்தேன். அந்த அவகாசம் இன்று (நேற்று) காலை 10 மணியுடன் நிறைவுக்கு வந்துள்ளது.

அதனால் என்னுடைய கடமையை நான் செய்வதற்கு தயாராக இருக்கிறேன்.

முதலாவது விசாரணைக் குழுவின் அறிக்கையும் இரண்டாவது விசாரணைக் குழுவின் அறிக்கையும் என்னிடம் உள்ளன.

ஓய்வுபெற்ற நீதியரசர் ஏ. என். ஜே. டி. அல்விஸ் தலைமையில் ஸ்தாபிக்கப்பட்ட விசாரணைக் குழு 2024ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 14 ஆம் திகதி அப்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் தனது அறிக்கையை சமர்ப்பித்தது.

இந்த அறிக்கையை தற்போதைய ஜனாதிபதி தலைமையிலான அரசாங்கம் ஏன் மறைப்பதற்கு முயற்சிக்கிறது? அதற்கான விடை இந்த அறிக்கையில் உள்ளது. அறிக்கையின் 40ஆவது பக்கத்தில் தகவல் தரப்பட்டுள்ளது.

மொஹமட் சஹ்ரான் உள்ளிட்ட தௌஹீத் ஜமாஅத் குழுவினரால் கிறிஸ்தவ தேவாலயங்கள் மீது தாக்குதல் நடத்தப்படவுள்ளதென வெளிநாட்டு புலனாய்வுப் பிரிவினரால் தமக்கு தகவல் வழங்கப்பட்டுள்ளதாக 2019 ஏப்ரல் ஒன்பதாம் திகதி அரச புலனாய்வு பிரிவு பணிப்பாளரினால் குற்றப் புலனாய்வுப் பிரிவின் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மாஅதிபருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

யார் இந்த சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மாஅதிபர்?

அவர் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் தற்போதைய செயலாளர் ரவி செனவிரத்ன.

அரச புலனாய்வுப் பிரிவின் பணிப்பாளரால் அப்போதைய சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மாஅதிபர் ரவி செனவிரத்னவுக்கு அனுப்பப்பட்ட கடிதத்தில், தாக்குதல் நடத்தவுள்ளோர் யார்? அவர்களது அடையாள அட்டை இலக்கங்கள், தொலைபேசி இலக்கங்கள், விலாசம், வழமையாக நடமாடும் இடங்கள், பழகும் நபர்கள் என அனைத்து விவரங்களும் வழங்கப்பட்டுள்ளன. ஒரு சிலர் இரவு நேரங்களில் தங்கியிருந்து செல்லும் இடங்களும் அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன.

அவ்வாறு ஏராளமான தகவல் நிறைந்ததாக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

2019 ஆம் ஆண்டு ஏப்ரல் 09ஆம் திகதி இந்தக் கடிதம் அனுப்பப்பட்ட போது ரவி செனவிரத்ன வெளிநாட்டுக்கு விஜயம் மேற்கொண்டிருந்தார்.

அவர் மீண்டும் இலங்கைக்கு வந்து ஏப்ரல் 16 ஆம் திகதியே அந்தக் கடிதத்தை வாசித்துள்ளார்.

இது தொடர்பில் ஏனைய உயர் அதிகாரிகளிடம் விசாரித்தபோது இரசகியம் பேணப்படவேண்டும் என குறிப்பிடப்பட்டு தனக்கு அனுப்பப்படும் கடிதங்களை தான் வரும்வரை மேசையின்மீது வைக்குமாறு ரவி செனவிரத்ன பணித்துள்ளாரெனக் கூறியுள்ளார்கள்.

ரவி செனவிரத்னவின் சட்டவிரோத செயல்பாடு காரணமாக அந்தக் கடிதம் மேசையின் மீது வைக்கப்பட்டுள்ளது.

ஏப்ரல் 21ஆம் திகதி தாக்குதல் நடத்தப்படும் வரை இந்தக் கடிதம் குற்றப் புலனாய்வுப் பிரிவின் பிரதிப் பொலிஸ் மாஅதிபர் நாகஹமுல்லவுக்கு கிடைக்கப் பெறவில்லை.

ஆகவே, ரவி செனவிரத்னவின் கவனவீனம் காரணமாகவே தாக்குதலை தடுக்க முடியாமல் போனது எனவும் அதனால் அவருக்கு எதிராக குற்றவியல் வழக்குத் தாக்கல் மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும் அறிக்கையின் 41ஆவது பக்கத்தில் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

ரவி செனவிரத்னவுக்கு மேலதிகமாக குற்றப் புலனாய்வுப் பிரிவின் பணிப்பாளர் ஷானி அபேசேகரமீதும் குற்றவியல் வழக்கு தாக்கல் செய்யப்பட வேண்டும் என அல்விஸ் அறிக்கையின் 14ஆவது பக்கத்தில் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

ஜனாதிபதியும் அரசாங்கமும் இந்த அறிக்கையை ஏன் மறைக்க வேண்டும்? நாம் இந்த அறிக்கையை இன்று வெளிப்படுத்தாவிட்டால் குற்றவாளிகளுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யாமல் இருப்பதற்கு ஜனாதிபதியால் முடியுமாக இருந்திருக்கும்.

தேர்தலின்போது தமக்கு உதவிய நபர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்காமல் இருப்பதற்கு ஜனாதிபதி இந்த அறிக்கைகளை மறைக்க முயற்சித்துள்ளார்.

பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் பதவியிலிருந்து ரவி செனவிரத்ன உடனடியாக பதவி நீக்கப்பட வேண்டும்.

இதேவேளை மற்றுமோர் அறிக்கையின் விபரங்களை எதிர்வரும் 28ஆம் திகதி திங்கட்கிழமை காலை 10 மணிக்கு வெளியிடத் தயாராக இருக்கிறேன்-என்றார். (அ)

## மஹிந்தவின்...

கொழும்பில் உள்ள கட்சியின் தலைமையகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

மேலும், மஹிந்த ராஜபக்ஷ நாட்டில் மிகவும் அச்சுறுத்தலாக காணப்பட்ட பயங்கரவாதத்தை ஒழித்தவராவார். அவருக்கு புலம்பெயர் அமைப்புகளாலும் பயங்கரவாத அமைப்புகளாலும் உயிர் அச்சுறுத்தல் காணப்படுகிறது.

இவ்வாறான தலைவரை பாதுகாக்க வேண்டியது அரசாங்கத்தின் பொறுப்பாகும். ஆதலால் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் பாதுகாப்பை கருத்திற்கொண்டு செயற்படுமாறு ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க தலைமையிலான அரசாங்கத்தை கேட்டுக்கொள்கிறேன் - என்றார். (அ)

## பாதாள...

"தலைதூக்கி வரும் பாதாள உலக குழுக்களை கட்டுப்படுத்தும் செயல்பாட்டில் ஈடுபட்டுள்ள விசேட அதிரடிப் படையினருக்கு எதரிாக 17 வழக்குகள் தாக்கல் செய்யப்டுள்ளன. இந்த வழக்குகளுக்கு அதிகாரிகள் தங்கள் சொந்தப் பணத்தை செலவு செய்ய வேண்டியுள்ளது.

இதனால் சில அதிகாரிகள் பாதாள உலக குழுக்களை கட்டுப்படுத்தும் செயல்பாடுகளில் இருந்து விலகச் சென்றுள்ளனர். ஆகவே, அவர்களுக்கு எதிராக குற்றவாளிகளால் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்குகளை நீக்கவும் அவர்கள் தொடர்ந்து செயல்படவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்." சந்திப்பில் கலந்துகொண்ட சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் வருண ஜயசுந்தர வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பில் சட்டமா அதிபரை தலையீடுகளை மேற்கொள்ளுமாறு பணிப்புரை விடுத்த ஜனாதிபதி, இந்த வழக்குகளை நீக்குவதற்கான வழிமுறைகள் குறித்து ஆராய்ந்து பாதாள உலக குழுக்களை அழிக்கும் செயல்பாட்டை தொடர்ந்து முன்னெடுத்துச் செல்வதற்கான ஆலோசனையையும் வழங்கினார்.

## பொதுத் தேர்த...

அவர்களினால் குறித்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

ஜனாதிபதியின் சார்பில் சட்டமா அதிபர், ஜனாதிபதியின் செயலாளர், தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மற்றும் ஏனைய உறுப்பினர்கள் மற்றும் சட்டமா அதிபர் ஆகியோர் பிரதிவாதிகளாக குறிப்பிடப்பட்டுள்ளனர்.

பாராளுமன்ற தேர்தல் சட்டத்தின் 10ஆவது பிரிவின்படி, வேட்புமனு தாக்கல் செய்வதற்கான திகதி ஒக்ரோபர் 4 முதல் ஒக்ரோபர் 11 வரை நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக மனுதாரர் சுட்டிக்காட்டினார்.

தேர்தல்கள் சட்டத்தின்படி, ஐந்து வாரங்களுக்கு குறையாமலும் வேட்புமனு தாக்கல் முடிவடைந்த நாளிலிருந்து ஏழு வாரங்களுக்கு மிகையாகாமலும் வாக்குப்பதிவுக்கான திகதி நிர்ணயிக்கப்பட வேண்டும்.

இதன்படி, வேட்புமனு ஏற்கும் பணி முடிவடையும் ஒக்ரோபர் 11ஆம் திகதி முதல் ஐந்து வார கால அவகாசம் நவம்பர் 15ஆம் திகதியும், ஏழு வார கால அவகாசம் நவம்பர் 29ஆம் திகதியும் நிறைவடையும் என்று மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும், தற்போது பாராளுமன்றத் தேர்தல் நடைபெறவுள்ள நவம்பர் 14ஆம் திகதி, அந்த சட்டக் காலப்பகுதியில் உள்ளடக்கப்படாததால், அன்றைய தினம் பாராளுமன்ற தேர்தலை நடத்துவது சட்டத்திற்கு முரணானது என மனுதாரர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்தத் தவறு குறித்து தேர்தல் ஆணைக்குழுவின் தலைவருக்கு தெரிவித்தும் பலனில்லை என மனுவில் கூறப்பட்டுள்ளது. (அ)

## யாழ். இ. போ....

சாரதிகள், நடத்துநர்கள் தாக்கப்படுவதாகவும் இதற்கு பொலிஸார் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் கவனயீர்ப்பில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர். தமது பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட வேண்டும் எனவும் போராட்டத்தில் ஈடுபட்ட இலங்கை போக்குவரத்து சபையின் சாரதிகள், நடத்துநர்கள் வலியுறுத்தினர். (அ)

## டானா புயலால்...

டானா புயலால் இலங்கையின் வடக்கு - கிழக்குக்கு பாதிப்பு ஏற்படுமா என்பது தொடர்பில் அவரிடம் எழுப்பிய கேள்விக்கே அவர் மேற்கண்டவாறு பதிலளித்தார்.

மேலும், "இன்று தீவிர தாழமுக்கமாக இருந்து நாளை புயலாக மாறிவிடும். அது இந்தியாவின் ஒடிசா - அஸாம் மாநிலங்களுக்கு இடைப்பட்ட பகுதியில் கரையை கடக்கும். இதனால் எங்களுக்கு நேரடியாக எந்தப் பாதிப்பும் இல்லை. ஆனால், இன்றிலிருந்து கடல் கொந்தளிப்பாக இருக்கும். சில சமயங்களில் அலைகளின் உயரங்கள் அதிகரிக்கும். காற்றும் அதிகமாக இருக்கும் என்பதால் கடலுக்கு மீனவர்கள் செல்வது அவ்வளவு நல்லதல்ல"- என்றார்.

இதேவேளை, வங்காள விரிகுடாவில் ஏற்படவுள்ள காற்றழுத்தத் தாழ்வுநிலை காரணமாக எதிர்வரும் 26ஆம் திகதி வரை வடக்கில் கனமழைக்குச் சாத்தியம் உள்ளது என்றும் கூறினார். (எ)

## 50 ஆயிரம்...

இதற்கான சலுகைக் கால அறிவிப்பு இந்த வாரத்தில் புதுடில்லியிலிருந்து வரும் என எதிர்பார்க்கப்படுகின்றது. அரசியல் தலைவர்கள் சம்பந்தப்படாமல் நேரடியாக இராஜதந்திர மட்டத்தில் பேசப்பட்டு இந்த இணக்க நிலை எட்டப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இதன்படி, இந்தியாவுக்கு இலங்கை வரும் வாரத்தில் செலுத்த வேண்டிய சுமார் ஐம்பதாயிரம் கோடி ரூபாய் நிலுவையைச் செலுத்துவதற்கான கால எல்லை நீடிக்கப்பட இருக்கின்றது.

அரச உயர்மட்ட வட்டாரத்தில் இது தொடர்பாக பேசப்படாவிட்டாலும், இரு நாடுகளுக்கும் இடையிலான இராஜதந்திரப் பேச்சுகள் மூலம், இந்த இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளது எனத் தெரியவருகின்றது.

இந்திய-இலங்கை கடன் உடன்படிக்கையின் கீழ் , இந்திய ரிசர்வ் வங்கிக்கு மொத்தக் கடனாக இலங்கை 2.6 பில்லியன் டொலர்களை இலங்கை செலுத்த வேண்டும். இதில், சார்க் ஒப்பந்தம், ஏனைய கடன் வசதிகள் மூலம் செலுத்தப்படும் தொகையை விட 1.7 பில்லியன் டொலர்களை (50 ஆயிரம் கோடி இலங்கை ரூபாயை) இலங்கை வரும் வாரத்தில் இந்தியாவுக்குக் கடனாகச் செலுத்த வேண்டும். இந்தத் தொகையை இந்த வாரத்துக்குள் இலங்கை வழங்க வேண்டும். இன்றைய அரசியல் சூழலில், அரசோடு பேச்சு நடத்த முடியாத நிலையில், இந்தியாவும் இலங்கையும் இராஜதந்திர மட்டத்தில் பேச்சு நடத்தி, கால நீடிப்புக்கு இணக்கம் கண்டுள்ளன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

எவ்வாறாயினும், புதிய பொருளாதார மீட்சி மற்றும் இலங்கையின் புதிய அரசு சர்வதேச நாணய நிதியத்துடன் ஆரம்பித்து வரும் கலந்துரையாடல்களைக் கருத்தில் கொண்டு, இலங்கையின் பொருளாதார ஸ்திரப்படுத்தல் செயல்முறைக்கு ஆதரவளிக்கும் வகையில் பரிமாற்ற ஏற்பாட்டை துரிதமாக நீடித்து உதவ இந்தியா முன்வந்துள்ளது.

நிலுவையிலுள்ள கொடுப்பனவுகளை வழங்குவதற்கான முடிவை இந்தியத் தரப்பு உத்தியோகபூர்வமற்ற முறையில் இலங்கை அரசுக்குத் தெரிவித்துள்ளது எனவும், இது தொடர்பான உத்தியோகபூர்வ தகவல் உரிய நேரத்தில் அனுப்பப்படும் எனவும் வட்டாரங்கள் மேலும் குறிப்பிட்டுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# ஜே.வி. பி. இனவாதத்தை இன்னும் கைவிடவில்லை

## கூறுகிறார் சிவாஜிலிங்கம்

யாழ்ப்பாணம், ஒக். 22

**ஜே. வி. பியினர் இனவாதத்தை இன்னும் கைவிடவில்லை என ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்ப்பாண மாவட்ட வேட்பாளர் எம். கே. சிவாஜிலிங்கம் தெரிவித்தார்.**



யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துரைத்த போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-தமிழர்களுக்குப் பொருளாதார ரீதியாக மாத்திரமே பிரச்னை உள்ளதாகவும், 13ஆவது திருத்தம் மற்றும் அதிகாரப் பகிர்வு தொடர்பில் அங்குள்ள இளைஞர்கள் கவலைப்படவில்லை என ஜே.வி. பியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா குறிப்பிட்டிருந்தார். அத்துடன், ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையில் மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்தின் படி, ஓராண்டு காலம் அவகாசம் வழங்கி விசாரணைகளை மேற்கொள்வது என்பதை இலங்கை அரசாங்கம் மறுத்துள்ளது.

ஆகையால், இந்த பிரச்னையில் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் சர்வதேசத்துக்கு உதவத் தயாரில்லை என்பது தெளிவாகப் புலப்படுகிறது.

எனவே, ஜே.வி. பியினர் இனவாதத்தை இன்னும் கைவிடவில்லை-என்றார். (அ)

# சீனி மோசடி குறித்த விசாரணை மீள ஆரம்பம்

கொழும்பு, ஒக். 22

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஆட்சிக்காலத்தில் இடம்பெற்றதாகக் கூறப்படும் பெரும் சீனி மோசடி தொடர்பிலான விசாரணைகள் மீள ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

கோட்டாபயவின் அப்போதைய செயலாளர்களது அலைபேசி மற்றும் நிலையான தொலைபேசி இலக்கங்களின் வழியான தொடர்பாடல்கள் குறித்து விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

சீனி வரி மோசடியினால் அரசாங்கத்துக்கு 14 பில்லியன் ரூபாய் வரையில் நட்டம் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கணக்காய்வுகளின் மூலம் இந்த விடயம் தெரியவந்துள்ளதாக குறிப்பிடப்படுகின்றது. ஓர் இறக்குமதியாளருக்கு சாதக நிலை ஏற்படும் வகையில் செயல்பட்டுள்ளதாகவும் இதன் ஊடாக பெருந்தொகை மோசடி செய்யப்பட்டுள்ளதாகவும் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இந்தக் குற்றச்சாட்டு தொடர்பில் மீண்டும் அரசாங்கம் விசாரணைகளை ஆரம்பித்துள்ளது. (அ)

# எரிந்த நிலையில் சடலம் மீட்பு

மட்டக்களப்பு, ஒக். 22

மட்டக்களப்பு தலைமையக பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கூழாவடி பிரதேசத்தில் வயோதிபப் பெண் ஒருவர் தீயில் எரிந்த நிலையில் நேற்று முன்தினம் சடலமாக மீட்கப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கூழாவடியை சேர்ந்த 67 வயதுடைய 3 பிள்ளைகளின் தாயான வி. விஜயராணி என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டார்.

இது தொடர்பில் மேலதிக விசாரணைகளை மட்டு. தலைமையக பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (எ)

# மண்மேடு சரிந்து இருவர் காயம்

கொழும்பு, ஒக். 22

வீடொன்றின் மீது மண்மேடு சரிந்து வீழ்ந்ததில் பெண் உட்பட இருவர் காயமடைந்துள்ளனர்.

மாத்தறை -வெலிகம - பொல்வத்தை பகுதியில் நேற்று இந்தச் சம்பவம் இடம்பெற்றது. இதில், 48 வயது பெண்ணும் 51 வயதுடைய ஆணுமே காயமடைந்தனர்.

இருவரும் வீட்டின் சமையலறையில் காலை உணவு தயாரித்துக் கொண்டிருந்த போது வீட்டின் மீது திடீரென மண்மேடு சரிந்து வீழ்ந்துள்ளது.

இருவரும் மண் மேட்டில் சிக்கியுள்ள நிலையில், அலறல் சத்தத்தைக் கேட்ட பிரதேச வாசிகள் அவர்களைக் காப்பாற்றியுள்ளனர். இருவரும் மாத்தறை பொது மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளனர். (ஐ)

# இலங்கையில் நேரடி முதலீடுகள் 4-5 பில்லியன் டொலராக உயரும்

கொழும்பு, ஒக். 22

எதிர்வரும் பத்தாண்டு காலப்பகுதியில் இலங்கையில் நேரடி முதலீடுகள் 4 முதல் 5 பில்லியன் அமெரிக்க டொலர்களாக உயரும் என நம்பிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

தற்போது புதிய கொள்கை நடைமுறையில் உள்ள நிலையில் சட்ட விதிமுறைகள் மற்றும் வரி முறைமைகளில் மாற்றம் இல்லாத நிலையில் இது சாத்தியமாகும் காரணிகள் அதிகம் உள்ளன என்று குறிப்பிடப்பட்டுள்ளது. கோவிட் - 19 தொற்று மற்றும் 2022ஆம் ஆண்டில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியின் இடையூறுகள் இருந்தபோதிலும், தற்போது இலங்கை ஆசியாவில் துரிதகதியில் வளர்ந்து வரும் பொருளாதாரத்தைக் கொண்டுள்ள நாடுகளில் ஒன்றாகத் திகழ்வதாக நிபுணர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

கொழும்பு துறைமுக நகரத்தின் மேம்பாடு தற்போது சர்வதேச ரீதியாக முதலீட்டாளர்களைக் கவரும் விதத்தில் அமைகின்றது.

இது தவிர, வெளிநாட்டு சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கை நாளாந்தம் அதிகரித்து வருவதனால் பெருமளவிலானவர்கள் இலங்கையில் நேரடியாக முதலீடு செய்வதில் ஆர்வம் அதிகரித்து வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# கண்டி வீடொன்றிலிருந்து சொகுசுக் கார், ஜீப் மீட்பு!

கொழும்பு, ஒக். 22

கண்டி - அனிவத்தை பகுதியில் உள்ள வீடொன்றில் மறைத்து வைக்கப்பட்டிருந்த 6 கோடி ரூபாய்க்கும் அதிக பெறுமதியான சொகுசு ரக கார் ஒன்றும் ஜீப் ரக வாகனம் ஒன்றும் பொலிஸாரால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

கண்டி பிராந்தியத்திற்கு பொறுப்பான சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகருக்கு கிடைத்த இரகசிய தகவலுக்கமைய, குறித்த இரண்டு வாகனங்களும் நேற்று முன்தினம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

கண்டி - அனிவத்தை பகுதியில் அமைந்துள்ள குறித்த வீட்டின் வாகனத் தரிப்பிடத்தை சோதனையிட்டபோது, இரகசியமான முறையில் மறைத்து வைக்கப்பட்டிருந்த அந்த சொகுசு ரக காரும் ஜீப் ரக வாகனமும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

எவ்வாறாயினும், குறித்த 2 வாகனங்கள் தொடர்பான சட்ட ஆவணங்களை குறித்த வீட்டில் இருந்தவர்கள் சமர்ப்பிக்காதமையினால், அந்த வாகனங்களை பொலிஸார் பொறுப்பேற்றுள்ளனர்.

இந்தநிலையில், குறித்த சொகுசு கார் ஒன்றும் ஜீப் ரக வாகனமும் கண்டி - மஹிய்யாவ பகுதியில் கார் விற்பனை நிலையத்தை நடத்தும் ஒருவருக்கு சொந்தமானது என ஆரம்பக்கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

குறித்த நபர் கடந்த காலங்களில் துறைமுக அதிகார சபையில் உயர் பதவியை வகித்துள்ளதுடன், அரசியல்வாதி ஒருவருடன் நெருங்கிய தொடர்புகளை பேணி வந்ததாகவும் தெரியவந்துள்ளது. (அ)

# வைத்தியரை தாக்கி வைத்தியசாலையின் சொத்துகளை சேதப்படுத்திய 7 பேர் கைது!

கொழும்பு, ஒக். 22

முல்லேரியா, கொழும்பு கிழக்கு ஆதார வைத்தியசாலையில் பணிபுரியும் வைத்தியர் ஒருவரை தாக்கி வைத்தியசாலையின் சொத்துகளை சேதப்படுத்தினாரெனக் கூறப்படும் இரண்டு பெண்கள் உட்பட ஏழு பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று முல்லேரியா பொலிஸார் தெரிவித்தனர்.

நிகழ்வொன்றில் பங்கேற்றுவிட்டு மீண்டும் வீடு நோக்கி மோட்டார் சைக்கிளில் சென்றுகொண்டிருந்த 21 வயது இளைஞர் ஒருவர் விபத்தில் சிக்கி படுகாயமடைந்தார். அவர் முல்லேரியா, கொழும்பு கிழக்கு ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்தார்.

அவரை மேலதிக சிகிச்சைக்காக கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு உடனடியாக மாற்றுவதற்கு தாமதிப்பதாக கூறி காயமடைந்த இளைஞனின் நண்பர்கள் சிலர் அங்கிருந்த வைத்தியர் ஒருவருடன் தகராறில் ஈடுபட்டுள்ளனர்.

இதன்போது, காயமடைந்த இளைஞரின் நண்பர்கள் அந்த வைத்தியரைத் தாக்கியதுடன் வைத்தியசாலையிலிருந்த சொத்துகளையும் உடைத்துச் சேதப்படுத்தினர். இந்த சம்பவத்தின் அடிப்படையிலேயே அவர்கள் கைது செய்யப்பட்டனர்.

# அபிவிருத்தி திட்டங்களை முன்னெடுக்க முடியாது!

கொழும்பு, ஒக். 22

மாகாண ஆளுநர்களின் மேற்பார்வையின் கீழ் மாவட்ட ஒருங்கிணைப்பு குழுக்களால் மேற்பார்வையிடப்படும் அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுப்பதற்கான ஜனாதிபதியின் உத்தரவை, தேர்தல் ஆணைக்குழு இடைநிறுத்தியுள்ளது. ஆளுநர்கள் அரசியல் ரீதியாக நியமனம் செய்யப்பட்டவர்கள் என்ற அடிப்படையில் இதுபோன்ற நடவடிக்கைகள் தேர்தல் சட்டங்களை மீறும் வகையில் அமையும் என்று தேர்தல் ஆணையகம் கருதுகிறது.

முன்னதாக, பாராளுமன்றம் கலைக்கப்பட்டதை தொடர்ந்து செயலிழந்துபோன அபிவிருத்தித் திட்டங்களின் செயற்பாடுகளை மாகாண ஆளுநர்களின் ஒருங்கிணைப்பின்கீழ் தொடரக்கூடிய முறையான பொறிமுறையை வகுக்குமாறு மாவட்ட செயலாளர்களுக்கு ஜனாதிபதியின் செயலாளர் அறிவுறுத்தியிருந்தார்.

பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு ஒதுக்கப்பட்ட பரவலாக்கப்பட்ட வரவு-செலவுத் திட்ட நிதிகளின் மூலம் இந்த திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டிருந்தன. (அ)

# பாராளுமன்ற தேர்தலில் அஞ்சல் மூலம் வாக்களிப்பதற்கு 738,659 பேர் தகுதி!

கொழும்பு, ஒக். 22

எதிர்வரும் பொதுத் தேர்தலுக்காக 759,210 அஞ்சல் மூல வாக்களிப்புக்கான விண்ணப்பங்கள் கிடைக்கப் பெற்றுள்ளன என்று தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் சிறீ ரத்நாயக்க இதனைத் தெரிவித்தார். அதில் 20 ஆயிரத்து 551 விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டுள்ளன என்று அவர் குறிப்பிட்டார்.

அதற்கமைய, இதுவரையில் ஏற்றுக்கொள்ளப்பட்ட அஞ்சல் மூல விண்ணப்பங்களின் படி, 7 இலட்சத்து 38 ஆயிரத்து 659 பேர் அஞ்சல் மூலம் வாக்களிப்பதற்குத் தகுதி பெற்றுள்ளதாகத் தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் கூறினார்.

இதேவேளை, எதிர்வரும் பொதுத் தேர்தலுக்கான அஞ்சல் மூல வாக்களிப்பு ஐந்து நாட்கள் இடம்பெறவுள்ளன.

அதன்படி, பொதுத் தேர்தலுக்கான அஞ்சல் மூல வாக்களிப்பு மாவட்ட செயலகங்கள், தேர்தல் அலுவலகங்கள், பொலிஸ் நிலையங்களில் இந்த மாதம் 30ஆம் திகதியும் அடுத்த மாதம் 4ஆம் திகதியும் இடம்பெறவுள்ளன.

அத்துடன் ஏனைய அரச நிறுவனங்களிலும் இராணுவ முகாம்களிலும் அடுத்த மாதம் முதலாம் திகதியும் 4ஆம் திகதியும் அஞ்சல் மூல வாக்களிப்பு நடைபெறவுள்ளது.

குறித்த தினங்களில் வாக்களிக்க முடியாதவர்களுக்கு அடுத்த மாதம் 7ஆம் 8ஆம் திகதி வாக்களிக்க சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 22.10.2024 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.